பார்வதி

(தமிழ் மாதப் பத்திரிகை)

முதல் இதழ்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
MADRAS

"PARVATI," TAMIL MONTHLY. MADRAS 2. JAN. As. 8

1950 ௵ ஜனவரி மீ 14உ பொங்கல் ரிலீஸ்
மாடர்ன் தியேட்டர்ஸின்
பொன்முடி
இனிய தமிழ் நாட்டின் இயல்புடன் கூடிய
களங்கமற்ற காதல் சித்திரம்
கதை
பாரதிதாசன்
டைரக்ஷன்
எல்லிஸ் R. டங்கன்

OFFICE OF ... RAR OF BOOKS
MADRAS

உபயோகத்தில் சிறந்தவை
சந்தனம் · கஜாசி · மெடிகோ வாசனை சோப்புகள்
தயாரிப்பவர்கள் :
P.B. மோஹன் பிரதர்ஸ்.
சைதாப்பேட்டை, மதராஸ் 15.

சினிமா ரஸிகர்களுக்கும்
பிரபல தியேட்டர் சொந்தக்காரர்களுக்கும்

எமது
பொங்கல்
வாழ்த்துக்கள்

பாலாஜியின்

லைலா மஜ்னு (தமிழ்)

(PROP: C.T.R.M. FILMS)
FOR MADURA, RAMNAD, TRICHY.

OTHER HINDI PICTURES
DOSTI... VASANT BENGALI
JAGAT KESARI.. DAKU-KI-LADKI
SASSI PUNNU.. TIGER WOMAN

மற்றும்
ருக்மாங்கதன்
ஏகம்பவாணன்
லவங்கி
டேஞ்சர் சிக்னல்
சாந்தா

RANGANATH FILMS
TEPPAKULAM TRICHY

மதராஸ் தியேட்டர்களில்

இப்பொழுது நடைபெறுகின்றன

பிரபாத்

ஜெமினியின்

அபூர்வ சகோதரர்கள்

எம். கே. ராதா—பி. பானுமதி

நடித்தது

பிராட்வே

மாடர்ன் தியேட்டர்ஸின்

பொன்முடி

நரசிம்மபாரதி—மாதுரி தேவி நடித்தது

டைரக்ஷன் : எல்லிஸ் ஆர். டங்கன்

கினிமாசென்ட்ரல்

மாடர்ன் தியேட்டர்ஸின்

ஆதித்தன் கனவு

டி. ஆர். மகாலிங்கம்—அஞ்சலிதேவி

நடித்தது

ஸரஸ்வதி

மாடர்ன் தியேட்டர்ஸின்

பொன்முடி

நரசிம்மபாரதி—மாதுரி தேவி

நடித்தது

கதை : 'பாரதிதாசன்'

MANAGING DIRECTOR: SRI. G.P. SARATHY.

MADRAS THEATRES LTD MADRAS.1

பார்வதீ

தமிழ் மாத இதழ்

ஆசிரியர் - பிரசுரகர்த்தர் :
வே. நமசிவாயம்

துணை ஆசிரியர் :
வை. சுப்ரமண்யன்

படப்பிடிப்பு :
வே. தாண்டவம்
தா. ஜேசுதாஸ்

சித்திரம் :
வே. நமசிவாயம்
க. மோகனகிருஷ்ணன்
த. கெஜானந்தம்

மேக் - அப் :
ரா. பரத்வாஜ்

தயாரிப்பு :
பாரத் ஸ்டுடியோ

'பார்வதி' பாரத் ஸ்டுடியோவின் தயாரிப்பாக, பிரதி ஆங்கில மாதமும் முதல் தேதியன்று வெளியாகிறது.

காரியாலயம் :
2/11, மவுண்ட் ரோட், சென்னை-2.
போன் : 8172

வருடச் சந்தா :

உள்நாடு	6—0—0
வெளிநாடு	7—8—0

தனிப்பிரதி
உள்நாடு அணா 8.
வெளிநாடு அணா 10

கலை 1 } அகவிருள் அகற்றி அரு ளொளி வீசுக { சித்திரம் 1

விரோதி௵ தை௴ : ஜனவரி, 1950

பொருள் அடக்கம்

		பக்கம்
சமர்ப்பணம்	கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை	6
அன்னைக்கு அஞ்சலி		....
காந்தி அண்ணலுக்குக் கைம்மாறு	கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை	8
குயில்	ஸி. சுப்பிரமணிய பாரதியார்	10
கடமை	'விஜயபதி'	18
துன்பக் குரல்	மு. வரதராசனார்	26
தவம் பலித்தது	எஸ். வி. ராமசுவாமி	28
தீராத விளையாட்டுப்பிள்ளை	சி. வ. ரா.	36
காலணா	வை. சுப்ரமண்யன்	40
புத்தமுதப் பொங்கலிட்	சாலிவாஹனன்	44
அட்டைப்பட விளக்கம்		44
சுட்டும் விழிச்சுடர்	பாரதியார்	45
கலை அரங்கம்		46
அன்பிற்கு அஞ்சிய மரணம்	டொரின்ராய்	52
கார்போன்று வாழி	' புன்னகை '	57
கதை என்ன ?		58
பொருமை விடு	(பாலர் கதை) 'புலிப்பித்தன்'	60
தையும் பிறந்தது	' மகரம் '	63
' பார்வதி பகுத்தறிவு'ப் போட்டி—1		65

'பார்வதி'யில் வெளியாகும் கதைகளில் காணப்பெறும் பெயர்கள் யாவும் கற்பனையே ; அவை யாரையும் குறிப்பிடா. படத்தில் தோன்றும் நடிகர்களுக்கும் கதைகளுக்கும் எவ்விதமான சம்பந்தமும் கிடையாது.

சமர்ப்பணம்

எத்தொழிற்கும் முன்நின் றெமக்குத் துணைபுரியும்
அத்திமுகத் தண்ணல் அருளினால்—வித்தகர்தம்
கண்ணும் கருத்தும் களிக்கவரும் 'பார்வதி' நீ
மண்ணுலகில் வாழ்க வளர்ந்து.

தேசிகவிநாயகம்



அன்னைக்கு அஞ்சலி

அன்னை பராசக்தியின் பெயர் தாங்கி வெளி வந்துள்ள நம் பத்திரிகைக்குத் தீர்க்காயுசை அளிக்குமாறு சித்திவிநாயகனையும், தமிழ்க் கடவுள் எம்பெருமான் முருகனையும், முத்தொழிற்கும் மூலக் கடவுளர்களாகிய சிவ - சக்தியையும் அடிபணிந்து வணங்கிக் கோருகிறோம்.

அன்பர்கள் எல்லோருக்கும் நமது பொங்கல் வாழ்த்துக்கள் உரித்தாகுக !

'பார்வதி'யை அன்பர்களின் கரங்களிலே காணும்போது அளவிலடங்காத உவகை உண்டாகிறது. பத்திரிகை வெளியாகிவிட்டது என்பதை நினைக்கும்போது எவ்வளவுக்கெவ்வளவு பூரிப்பும் புளகமும் உண்டாகின்றனவோ, அவ்வளவுக் கவ்வளவு பிரமிப்பும் தட்டத்தான் செய்கிறது! கடந்த ஒன்றரை வருட காலமாகக் கண்ட கனவு உண்மையாகவே பலித்து விட்டதா? 'பார்வதி'யை உண்மையிலேயே வெளியிட்டு விட்டோமா? தமிழர்கள் முகம் மலர 'பார்வதி' இதழைக் கையிலே தாங்கி, " 'பார்வதி' முதல் இதழ் வெளி வந்து விட்டது!" என்று மகிழ்ச்சி பொங்கலிடக் கூறுகின்றனரா ?

இத்தனை கேள்விகளுக்கும் 'ஆம்!' என்றுதான் பதில் கூறவேண்டும்! 'பார்வதி'யை வெளிக்கொணர்ந்து விட்டதில் நமக்குப் பிரமிப்புத் தட்டுவதன் காரணம் : 'பத்திரிகை உலகிலே கணப்பொழுதுக் கொரு பத்திரிகை ஜனனம் பெறும் சந்தர்ப்பத்தில் 'பார்வதி' தமிழ் ரஸிகர்களுக்கு என்னென்ன புதுமைகளை அளிக்கக் கூடும் ? இலக்கியப் பத்திரிகைகள் பலவும் சென்றுகொண் டிருக்கும் பாதையில் அன்றி ஒரு தனிப் பாதை வகுத்து, இலக்கியத்தையும் வழி பிசகாத தூய முறையில் தன்னுடன் ஈடுபடுத்திச் செல்ல 'பார்வதி' முற்படட்டுமே!"—இந்தத் தீர்மானத்துடன் சென்ற ஒன்றரை வருட காலமாக 'பார்வதி'யை உருவாக்குவதில் தீவிரமாக ஈடுபட்டுப் பல திட்டங்களையும் வகுத்தோம். திட்டங்களை நிறைவேற்ற எடுத்துக்கொண்ட அவகாசத்தினிடையில் தான் நூற்றுக்கணக்கான ஏஜெண்டுகளும், சந்தாதார்களும், பொது மக்களும், " 'பார்வதி' எப்போது வருகிறது?" என்ற கேள்விகளைத் தபால் மூலமும் நேரிலும் கேட்டு நம்மைத் திணறவடித்தனர். நாம் எதிர்பார்த்த அளவில் பத்திரிகை உருவாகும் தருணமும், நேயர்கள் 'பத்திரிகை எங்கே? எப்போது வெளிவரும்? இந்த வருடப் பொங்கல் பரிசாகவாவது அதை எங்களுக்கு அளிக்க வேண்டும்!' என்று வேண்டுகோள்கள் விடுத்த தருணமும் ஒன்றாக வாய்த்துக்கொண்டன. பத்திரிகையை நமது திட்டங்களின்படி வெளியிட்டு விட்டோம்! ஆனாலும், 'பத்திரிகை வெளியாகிவிட்டது!' என்பதை நினைத்துக் கொள்ளும்போதே, 'நாம் கண்ட அளவுக்குக் கனவு பலித்திருக்கிறதா? திட்டப்படி பத்திரிகை அமைந்துள்ளதா?' என்று நம்மை நாமே கேட்டுக்கொள்ளும்போது தான் அப்படிப் பிரமிப்புத் தட்டுகிறது! ஒருவர் திருப்திக்காக எவ்வளவு செய்தாலும் நமது மனம் திருப்தியுறாது, 'இன்னும் செய்திருக்கலாம்!' என்று நினைக்குமல்லவா? அத்தகைய மனோ நிலைதான் இதுவும்!

'பார்வதி'யின் அடுத்துவரும் இதழ்கள் இன்னும் சிறந்து விளங்கும் என்பதை இப்போதே சொல்லிவிடுகிறோம்! பத்திரிகையின் வளர்ச்சிக்கான புதிய புதிய ஆலோசனைகளை அவ்வப்போது தெரிவிக்குமாறு வாசகர்களைக் கேட்டுக் கொள்கிறோம். இடையறாத உற்சாகத்துடன் பத்திரிகையை நடத்திவர எங்களுக்குப் பரிபூரண ஆசியை அளிக்குமாறு அன்னை பராசக்தியையும் வேண்டுகிறோம்.



—ஆசிரியர்





காந்தி அண்ணலுக்குக்கைம்மாறு

கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை

வையத்து வாழ்வாங்கு வாழ்ந்தவன் வானுறையும்
தெய்வத்தோ டொத்த திருவுடையான்—பொய்யற்ற
காந்திமகான் கற்பனைகள் கற்றுக் கடைப்பிடித்த
மாந்தரென்றும் வாழ்வர் மகிழ்ந்து.

இந்த யுகத்திலே பிறந்த ஒரு சிறந்த புண்ணிய புருஷர் காந்திஜி. அவர் பேரறிஞர்; தீர்க்கதரிசி; சீர்திருத்த வாதி; உலக நன்மையை நாடும் உத்தமர். அஹிம்சையும் சத்தியமும் அவருக்கு இரு கண்கள். அன்பே அவருக்கு உயிர். மக்களை அடிமைத் தளையினின்று அகற்றி நல் வாழ்வு வாழச் செய்வதே அவர் வாழ்வின் குறிக்கோள்.

'விஞ்ஞான வளர்ச்சி, விஞ்ஞான வளர்ச்சி' என்று உலகிலே பெரிதாகப் பேசப்படுகிறது. அவ்வளர்ச்சியினால் வானம் கனக மழை பொழிந்தாலும் சரி; வயல்கள் கதிருழக்கு நெல் விளைந்தாலும் சரி; மனிதர் உள்ளம் பண்பாடு அற்றதாக இருக்குமானால் இவற்றால் எதும் பயனில்லை.

ஒவ்வோர் உயிரினத்துக்கும் ஒவ்வோர் வகையான குணம்தான் உண்டு. ஆனால் மனிதன் எல்லாக் குணங்களும் நிறைந்தவன். அவனிடம் பேய்க் குணம் உண்டு; மிருக குணமும் உண்டு; அதே சமயம் தெய்வ குணமும் உண்டு. முன்னையவற்றை ஒடுக்கி, மக்களுக்குரிய நல்ல பண்புகளை வளர்க்க வேண்டுவதே மனிதன் அறிவு படைத்ததன் பயன். ஒரு நாட்டிலுள்ள மக்கள் அனைவரும் நன்மக்கட்குரிய பண்புகள் வாய்க்கப் பெறாத வரையில் அந்நாடு எந்தவிதமான அரசியல் சுதந்திரம் பெற்றும் பயனில்லை. விஞ்ஞான வளர்ச்சியடைந்தும் பயனில்லை. இது உண்மை.



கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை

இதனை யுணர்ந்த தீர்க்க தரிசியான காந்தி மகான் பாரத மக்கள் பண்புள்ளம் வாய்க்கப் பெற்றவர்களாய்த் திகழ வேண்டுமென்பதற்காக அல்லும் பகலும் பாடுபட்டார்; உபதேச மழை பொழிந்தார்; அருந் தொண்டுகள் புரிந்தார். இச் சேவையின் நடுவே இதே காரணத்துக்காக அவர் தம் பூதவுடலைப் போக்கினார்.

காந்திஜி நம்மைவிட்டுப் பிரிந்து இரண்டு வருடங்கள் ஆகின்றன. அவர் புகழ் பாரத நாடு உள்ள அளவும் அழியாது. அவர் போதித்த போதனைகள் நம் காதுகளில் ரீங்காரம் செய்கின்றன. தம்கடன் முடித்துத் தரணிவிட்ட அண்ணலுக்கு நாம் செய்யவேண்டும் கடமை என்ன?

அவருக்கு நினைவு நிலையங்கள் கட்டுவதும், ஸ்தூபிகள் எழுப்புவதும், சிலைகள் அமைப்பது மல்ல நாம் இப்போது செய்ய வேண்டுவது. இவற்றால் நம் பணக்கொழுப்புத்தான் புலனாகுமே ஒழிய வேறல்ல. அந்த மகான் என்னென்ன போதனைகளைப் போதித்தாரோ அவற்றை நாம் கற்றுக் கடைப் பிடிக்கவேண்டும். எந்தத் தத்துவங்கள் நம் நாட்டை அடிமை வாழ்விலிருந்து அமர வாழ்வுக்கு உயர்த்துகின்றனவோ, அவை நம் உயிர்த் தத்துவங்கள் என்று கருத வேண்டும். அவற்றின்படி என்றும் நடக்க வேண்டும்; பிறருக்கும் போதித்து நல்வழிப் படுத்த வேண்டும். இதுவே காந்தியண்ணலுக்கு நாம் புரியும் கைம்மாறு; வழிபாடு. இதனை மறவாமல் நடத்திக்காட்டி நன்மையடைவோமாக. ★



★

[மகாகவி பாரதியாரின் "குயில்" கவிதையை அநுபவிக்காத தமிழன் இருக்க முடியாது. அவருடைய கற்பனையில் விரிந்துள்ள காட்சிகளை மானஸீகமாக அநுபவிக்கும் நிலைதான் அவரவருக்கும் ஏற்படும். அந்தக் காட்சிகளையும், பாரதியார் அறிமுகப்படுத்தி யுள்ள பாத்திரங்களையும், அவர்களின் உணர்ச்சி பாவங்களையும் அடுத்து வரும் பக்கங்களில் காணலாம். கவியின் அநுமானத்தை இந்த உயிர்ச் சித்திரங்கள் ஓரளவு நிர்ணயித்துக் காட்டுகின்றன அல்லவா? குயில் தன் பூர்வ ஜன்மக் கதையை உரைக்கும் பகுதி இங்கு வெளியாகிறது.]

★

"நேவனே ! என்னருமைச் செல்வமே ! என்னுயிரே !
போவதன் முன்னொன்று புகல்வதனைக் கேட்டருள்வீர் !
முன்ன மொருநாள் முடிநீள் பொதியமலை
தன்னருகே நானுந் தனியேயோர் சோலைதனில்
மாங்கிளையி லேதோ மனதிலெண்ணி வீற்றிருந்தேன்.
ஆங்குவந்தா ரோர்முனிவர். ஆரோ பெரியரென்று
பாதத்தில் வீழ்ந்து பரவினேன் ; ஐயரெனை
ஆதரித்துவாழ்த்தியருளினர். மற்றதன்பின்
'வேத முனிவரே, மேதினியிற் கீழ்ப்பறவைச்
சாதியிலே நான் பிறந்தேன். சாதிக் குயில்களைப்போல்
இல்லாமல், என்றன் இயற்கை பிரிவாகி,

எல்லார் மொழியும் எனக்கு
விளங்குவதேன் ?
மானுடர்போற் சித்தநிலை வாய்ந்திருக்குஞ்
செய்தியேன் ?
யானுணரச் சொல்வீர்' என வணங்கிக்
கேட்கையிலே,
கூறுகின்றார் ஐயர் ; 'குயிலே, கேள்,
முற்பிறப்பில்
வீறுடைய வெந்தொழிலார் வேடர் குலத்
தலைவன்
வீர முருகனெனும் வேடன் மகளாகச்
சேர வளநாட்டில் தென்புறத்தே யோர்
மலையில்
வந்து பிறந்து வளர்ந்தாய் நீ. நல்லிளமை
முந்து மழகினிலே மூன்று தமிழ் நாட்டில்
யாரு நினக்கோர் இணையில்லை யென்றிடவே
சீருயர நின்றாய் ; செழுங்கான வேடரிலுன்
மாமன் மகனொருவன், மாடனெனும்
பேர்கொண்டான்,
காமன் கணைக்கிரையாய், நின்னழகைக்
கண்டுருகி,
நின்னை மணக்க நெடுநாள் விரும்பி, யவன்
பொன்னை மலரைப் புதுத்தேனைக் கொண்
டுனக்கு
நித்தங் கொடுத்து, நினைவெல்லா நீயாகச்
சித்தம் வருந்துகையில், தேமொழியே,
நீயவனை
மாலையிட வாக்களித்தாய் ; மையலினு
லில்லை ; அவன்
சால வருந்தல் சகிக்காமற்சொல்லிவிட்டாய்;
ஆயிடையே, நின்றன் அழகின் பெருங்கீர்த்தி
தேயமெங்குந் தான்பரவத் தேன்மலையின்
சார்பினிலோர்
வேடர்கோன், செல்வமுநல் வீரமுமே
தானுடையான் ;

நாடனைத்து மஞ்சி நடுங்குஞ்
செயலுடையான்,
மொட்டைப் புலியனுந்தன் மூத்த மகனான
நெட்டைக் குரங்கனுக்கு நேரான
பெண்வேண்டி,
நின்னை மணம்புரிய நிச்சயித்து, நின்னப்பன்
தன்னை யணுகி, "நின்னோர் தையலையென்
பிள்ளைக்குக்
கண்ணாலஞ் செய்யுங் கருத்துடையேன்"
என்றிடலும்,
எண்ணாப் பெருமகிழ்ச்சி எய்தியே,
நின் தந்தை
ஆங்கே யுடம்பட்டான் ; ஆறிரண்டு
நாட்களிலே
பாங்கா மணம்புரியத் தாமுறுதி
பண்ணிவிட்டார்.
பன்னிரண்டு நாட்களிலே பாவையுனைத்
தேன்மலையில்
அன்னியன் கொண்டேகிடுவான் என்னும்
அதுகேட்டு,
மாடன் மனப்புகைந்து மற்றைநாள்
உன்னைவந்து
நாடிச் சினத்துடனே நானா மொழிகூற,
நீயுமவனிடத்தே நீண்ட கருணையினால்
"காயுஞ் சினந்தவிர்ப்பாய், மாடா,
கடுமையினால்
நெட்டைக் குரங்கனுக்குப் பெண்டாக
நேர்ந்தாலும்,
கட்டுப் படி அவர்தங் காவலிற் போய்
வாழ்ந்தாலும்,
மாதமொரு மூன்றில் மருமஞ் சிலசெய்து
பேதம் விளைவித்துப் பின்னிங்கே
வந்திடுவேன் ;
தாலிதனை மீட்டுமவர் தங்களிடமே
கொடுத்து
நாலிரண்டு மாதத்தே நாயகனா நின்றனையே
பெற்றிடுவேன் ; நின்னிடத்தே பேச்சுத்
தவறுவனோ?
மற்றிதனை நம்பிடுவாய், மாடப்பா"
என்றுரைத்தாய் ;
காதலினாலில்லை, கருணையினா
லிஃதுரைத்தாய்.
(மாதரசாய், வேடன் மகளான முற்பிறப்பில்,
சின்னக் குயிலியென்று செப்பிடுவார்
நின் நாமம்.)

பின்னர்ச் சில தினங்கள் சென்றதன்பின்,
பெண்குயிலி,
நின்னொத்த தோழியரு நீயுமொரு
மாலையிலே
மின்னற் கொடிகள் விளையாடுதல் போலே
காட்டி னிடையே களித்தாடி நிற்கையிலே,
வேட்டைக் கென வந்தான் வெல்வேந்தன்
சேரமான்
தன்னருமை மைந்தன். தனியே,
துணைபிரிந்து,
மன்னவன் றன்மைந்த னொருமானைத்
தொடர்ந்துவரத்
தோழியரு நீயுந் தொகுத்துநின்றே
யாடுவதை
வாழியவன் கண்டுவிட்டான். மையல்
கரைகடந்து
நின்னை தனதாக்க நிச்சயித்தான். மாதுநீ
மன்னவனைக் கண்டவுடன் மாமோகங்
கொண்டுவிட்டாய்.
நின்னையவன் நோக்கினான்; நீயவனை நோக்கி
நின்றாய்
அன்னதொரு நோக்கினிலே ஆவி கலந்து
விட்டீர்.
தோழியரும் வேந்தன் சுடர்க்கோலந்
தான்கண்டே
ஆழி யரச னரும்புதல்வன் போலு மென்றே

அஞ்சி மறைந்து விட்டார். ஆங்கவனு
நின்னிடத்தே,
"வஞ்சித் தலைவன் மகன் யான்"
எனவுரைத்து,
"வேடர் தவமகளே, விந்தை யழகுடையாய்,
ஆடவனாத் தோன்றி யதன்பயனை யின்று
பெற்றேன் ;
கண்டதுமே நின்மிசைநான் காதல்
கொண்டேன்" என்றிசைக்க,
மண்டு பெருங்காதல் மனத்தடக்கி நீ
மொழிவாய் ;
"ஐயனே, உங்க ளரமனையில் ஐந்நூறு
தையல ருண்டாம் ; அழகில் தந்நிகரில்
லாதவராம் ;
கல்விதெரிந்தவராம்;கல்லுருகப் பாடுவராம;
அன்னவரைச் சேர்ந்தே நீர் அன்புடனே
வாழ்ந்திருப்பீர் ;
மன்னவரை வேண்டேன் மலைக்குறவர்
தம்மகள்யான் ;
கொல்லு மடற் சிங்கம் குழிமுயலை
வேட்பதுண்டோ ?
வெல்லுதிறல் மாவேந்தர் வேடருள்ளோ
பெண்ணெடுப்பார் ?
பத்தினியா வாழ்வதல்லால் பார்வேந்தர்
தாமெனினும்
நத்தி விலைமகளா நாங்கள் குடிபோவதில்லை,
பொன்னடியைப் போற்றுகின்றேன்,
போய்வருவீர். தோழியரும்
என்னை விட்டுப்போயினரே,
என்செய்கேன் ?" என்று நீ
நெஞ்சங் கலக்க மெய்தி நிற்கையிலே,
வேந்தன்மகன்
மிஞ்சுநின்றன் காதல் விழிக்குறிப்பி
னாலறிந்தே,
புக்கத்தில் வந்து பளிச்சென்றுனது
கன்னஞ்
செக்கச்சிவக்க முத்தமிட்டான். சினங்காட்டி
நீ விலகிச் சென்றாய்—நெறியேது
காமியர்க்கே ?—
தாவி நின்னைவந்து தழுவினான் மார்பிறுக.
"நின்னையன்றி யோர்பெண்
நிலத்திலுண்டோ என்றனக்கே?
பொன்னே, ஒளிர்மணியே, புத்தமுதே,
இன்பமே,
நீயே மனையாட்டி, நீயே யரசாணி,

நீயே துணை யெனக்கு, நீயே குலதெய்வம்.
நின்னையன்றிப் பெண்ணை நினைப்பேனோ ?
வீணிலே
என்னை நீ ஐயுறுதல் ஏதுக்காம் ?
இப்பொழுதே
நின்மனைக்குச் சென்றிடுவோம் ;
நின்வீட்டிலுள்ளோர்பால்
என்மனத்தைச் சொல்வேன், எனதுநிலை
யுரைப்பேன்,
வேத நெறியில் விவாகமுனைச் செய்து
கொள்வேன்.
மாதரசே" என்று வலக்கைதட்டி
வாக்களித்தான்.
பூரிப்புக் கொண்டாய், புளகநீ
யெய்திவிட்டாய்.
வாரிப் பெருந்திரைப்போல் வந்த
மகிழ்ச்சியிலே
நாணந் தவிர்த்தாய் ; நனவே
தவிர்ந்தவளாய்,
காணத் தெவிட்டாதோ ரின்பக் கனவினிலே
சேர்ந்துவிட்டாய். மன்னவன்றன்
திண்டோளை நீயுவகை
ஆர்ந்து தழுவி அவனிதழில் தேன்பருகச்
சிந்தை கொண்டாய். வேந்தன் மகன்,
தேனில்விழும் வண்டினைப்போல்,
விந்தையுறு காந்தமிசை வீழு
மிரும்பினைப்போல்,
ஆவலுடனின்னை யறத்தழுவி, ஆங்குனது
கோவையிதழ் பருகிக்கொண்டிருக்கும்
வேளையிலே,—
சற்றுமுன்னே யூரினின்றுந் தான்வந்
திறங்கியவன்,
மற்றுநீ வீட்டைவிட்டு மாதருடன்
காட்டினிலே
கூத்தினுக்குச் சென்றதனை கேட்டுக்
குதூகலமாய்
ஆத்திரந்தான் மிஞ்சி நின்னை ஆங்கெய்திக்
காணவந்தோன்,—
நெட்டைக் குரங்கன் நெருங்கிவந்து
பார்த்துவிட்டான்.
"பட்டப் பகலிலே ! பாவிமகள் செய்தியைப்
பார் !



கண்ணாலங் கூட இன்னும் கட்டி
முடியவில்லை.

மண்ணாக்கிவிட்டாள் ! என் மானந்
தொலைத்து விட்டாள் !

'நிச்சிய தாம்பூலம்' நிலையா நடந்திருக்கப்
பிச்சைச் சிறுக்கி செய்த பேதகத்தைப்
பார்த்தாயோ !"

என்று மனதில் எழுகின்ற தீயுடனே
நின்று கலங்கினான் நெட்டைக் குரங்கனங்கே.
மாப்பிள்ளை தான் ஊருக்கு வந்ததையும்,
பெண்குயிலி
தோப்பிலே தானுந் தன் தோழிகளு
மாச்சென்று
பாடி விளையாடும் பண்பு கேட்டே குரங்கன்
ஓடி யிருப்பதோ ருண்மையையு மாடனிடம்
யாரோ வுரைத்து விட்டார் ; ஈரிரண்டு
பாய்ச்சலிலே
நீரோடு மேனி நெருப்போடுங் கண்ணுடனே
மாடனங்கு வந்துநின்றான். மற்றிதனைத்
தேன்மலையின்
வேடர்கோன் மைந்தன் விழிகொண்டு

பார்க்கவில்லை.

நெட்டைக் குரங்கனங்கு நீண்ட மரப்போலே
எட்டிநிற்குஞ் செய்தி யிவன் பார்க்க
நேரமில்லை.

அன்னியனைப் பெண்குயிலி யார்ந்திருக்குஞ்
செய்தியொன்று
தன்னையே யிவ்விருவர் தாங்கண்டார்,
வேறறியார்.
மாடனதைத் தான்கண்டான், மற்றவனு
மஙஙனமே.
மாடன் வெறிகொண்டான், மற்றவனு
மவ்வாறே.
காவலன்றன் மைந்தனுமக் கன்னிகையுந்
தானுமங்கு
தேவ சுகங் கொண்டு விழியே திறக்கவில்லை.
ஆவிக் கலப்பி னமுத சுகந்தனிலே!
மேவியங்கு மூடி யிருந்த விழி நான்கு.
ஆங்கவற்றைக் கண்டமையால் ஆவியிலே
தீப்பற்றி
ஓங்கும் பொறிக ளுதிர்க்தும் விழிநான்கு.
மாடனுந்தன் வாளுருவி மன்னவனைக்
கொன்றிடவே
ஓடிவந்தான்; நெட்டைக் குரங்கனும்
வாளோங்கி வந்தான்.*

(மற்றவை பற்றி அடுத்த இதழில்)

கடமை

விஜயபதி

✲ வாழ்க்கையின் தார்த்ம்மியத் தையே நினைந்து, அதிருப்தியுடன் யந்திர வாழ்வு வாழும் மனைவி ;

✲ வாழ்க்கைக் குன்றின் அடிவாரத் தில் நின்று, மனைவியின் லட்சி யத்தை நிறைவேற்றும் வண்ணம் அவளை அக் குன்றின் முகடுக்கே தூக்கிவிடத் துடிக்கும் எளிய கணவன் ;

✲ இருவரையும் இறுகப் பிணைத் திருந்தது அன்பு ;

✲ இடையில் கடமையும் தலைநீட்டு கிறது ; அதன் உத்வேகத்தைத் தான் பாருங்களேன் !

"இந்தாங்கோ, இதோ இடமிருக்கு ; வாங்கோ" என்று தன் கணவனைக் கூப்பிட்டுக்கொண்டே வண்டியில் ஏறினாள் ராஜி. அவள் கணவன் ராமநாதனும் வண்டிக்குள் ஏறிக்கொண்டான். பார்க் ஸ்டேஷனைவிட்டு வண்டி நகர்ந்தது.

"இன்னிக்கு சினிமா எப்படி, ராஜி?" என்று பேச்சை ஆரம்பித்தான் ராமநாதன்.

ராஜி ஒரு சூள் கொட்டித் தன் அதிருப்தியை வெளியிட்டாள்.

"என்னமோ சினிமா !......நான் ஆதியிலே அடைஞ்ச சுகத்துக் கெல்லாம் உறைபோடக் காணுது....ஆனுல் வாழ்க்கையிலே ஆடிக்கொரு தரமாவது இந்த சினிமா பார்க்கக் கிடைக்கிற தேன்னு சந்தோஷப் படறேன்" என்ருள். தன் அதிருப்தியை அவள் இந்த ரீதியில் விரக்தியுடன் வெளியிட்டாலும், அவள் கடைசியில் சொன்ன வார்த்தைகள் ராமநாதனின் மனத்தைச் சிறிது சமாதானப்படுத்தப் போதுமா யிருந்தன. அவன் சாதாரணமாகவே கேட்டான் :

"என்ன ராஜி, இப்படிச் சொல்லுகிருய்?"

"வீட்டிலே போட்டது போட்டபடி விட்டுட்டு நாழியாயிடுத்துன்னு கிளம்பி விட்டேன். இனி மேல் பதினேரு மணிக்குப் போய் வேலைகளை யெல்லாம் செய்ய வேண்டும். எல்லாவற்றையும் போட்டுவிட்டுத் தூங்கிப் போய்ட்டேன்னு காலையில் உங்களுக்கு எட்டு மணிக்கு ஆபீசுக்குப் போறதுக்கு நான் எப்படிச் சமையல் பண்ண முடியும் ? வீடான வீட்டிலே ஒரு வேலைக்காரி!....ஊஹூம்! என்னமோ குடித்தனம் !...."

ராஜியின் உள்ளம் தன் நிலையை ராமநாத னுக்கு நன்ருக எதிரொலித்துக் காட்டியது.

"என் இப்படிக் குறைப்பட்டுக்கொள்றே ராஜி? அவாளவாள் அந்தஸ்துக்குத் தகுந்தபடிதானே எல்லாம் நடக்கும் ? எட்ட முடியாத சுகங்களுக் கும் வாழ்க்கைக்கும் ஆசைப்பட்டால் முடியுமா?" என்று கேட்டான் ராமநாதன்.

* * *

ராஜலட்சுமி ஒரு ஜமீன்தார் குடும்பத்துப்பெண். விதிச் சுழல் அவளை ஒரு எளிய குடும்பத்துப் பிள்ளையாகிய ராமநாதனுடன் பிணைத்து வைத் தது. எளிய அந்தஸ்துக் கேற்ப அவன் வாழ்க் கையும் எளியதா யிருந்தது. அவன் வருவாயும் அத்தகைய வாழ்க்கைக்குத்தான் போதுமானதா யிருந்தது. இந்தச் சூழ்நிலை ராஜலட்சுமியின் மன ஓட்டங்களை எப்படித் திருப்தி செய்யும்? சிறு பிராயத்தில் ஆடம்பர வாழ்க்கையிலேயே திளைத் திருந்த அவள் இந்த எளிய வாழ்க்கையைக் கண்டு மிகவும் குறைப் பட்டுக்கொள்ள வில்லை யாயினும், சிற்சில சமயங்களில் ஒரு பெருமூச்சி னுலும், 'உம்' மினுலும் சிறிதளவு கொண்ட மனக் குறையை வெளிக் காண்பிப்பாள். ராம நாதனும் அவ்வப்போது இந்தக் குறிப்பு உணர்ச் சிகளைக் கண்டு அவள் மனநிலையை அறிந்து வைத் திருந்தான்.

அவர்கள் ஏறிவந்த வண்டி கோடம்பாக்கத் தில் வந்து நின்றது. திடீரென்று அந்தப் பெட்டி யிலிருந்தவர்கள் கவனத்தை ஒருங்கே கவர்ந்தது 'கணீ'ரென்ற ஒரு பாட்டு. ஒரு மூலையிலிருந்து பிச்சைக்காரன் ஒருவன் இரண்டு குழந்தைக ளுடன் பாடிக்கொண்டே வந்தான்.

"ஐயோ சிறுவர் ஏழை யென்ருல்
மன மிரங்காதா ?
அந்தோ இவர்க்குத் தாயிலையே
பார்க்கலாகாதா ?..."

இனிமையான அவன் குரலும் பரிதாபம் நிறைந்த அந்தக் குழந்தைகளின் பார்வையும் எல்லோர் உள்ளங்களையும் கவர்ந்தன ; அவர் களில் பெரும்பாலோர் மனம் கரைந்தனர் ; சிலர் தம் அநுதாபத்தைக் காட்டும் வகையில் அப் பிச்சைக்காரனின் கையில் காலணு காசு போட்

டனர். அவன் அடி அடியாக முன்னேறி ராஜ லட்சுமியின் அருகில் வந்தான்; கையை நீட்டி ஞன். உடனே ராஜியும் ஒரணுவை எடுத்து அவன் கையில் போட்டாள். அதை வாங்கிக்கொண்டு திரும்பிஞன் அவன். அவனுக்குப் பிச்சை யிட்ட திருப்தி அவள் கண்களிலே படர்ந்து பிரகாசித்தது.

ராமநாதனின் குரல் அவளை அசைத்தது.

"என்ன ராஜி, தாராளமாக ஒரணுவைத் தூக்கி அவன் கையில் போட்டாயே! அவன் என்ன குருடா, முடமா? கல் குண்டு போல இருக் கான்! பிச்சை எடுக்க வந்துட்டான்; போதாக் குறைக்குக் குழந்தைகளையும் இந்த வழியிலேயே தயார் பண்ணுகிருன். ஏதாவது ஒரு தொழிலைச் செய்து அவர்களைக் காப்பாத்தக் கூடாதா? அவ னுக்கு இடம் கொடுக்கிற மாதிரி நீயும் பிச்சை போட்டாயே!" என்று பொரிந்து தள்ளிஞன் ராமநாதன்.

மௌனமாகக் கேட்டுக்கொண் டிருந்த ராஜி ஒரு முறை சிரித்தாள்; பிறகு கூறிஞள்: "போதும், உங்கள் வேதாந்தம்! பிச்சை எடுத்தாவது தன்மனைவி மக்களைச் சந்தோஷப் படுத்திக் காப்பாற்றவேணும் என்ற நோக்க

மும் அதற்கான முயற்சியும் அவனிடம் காணப்படுகின்றன. இது என்னமோ எனக்குச் சரியென்றே படுகிறது!'' என்று தீர்மானமாகக் கூறினுள் ராஜி.

ராமநாதனின் முகம் மாறுதலடைந்தது. அந்தத் திடீர்மாறுதலைக் குறிக்கும்வகையில் அவன் நெற்றியில் சுருக்கங்கள் விழுந்தன. ஏதோ மறந்துவிட்ட தன் கடமை யொன்றைத் தனக்குச் சுட்டிக் காட்டுவது போலிருந்தன அவளுடைய வார்த்தைகள். அது அவனிடம் ஒருவித வெட்கத்தைக் கிளப்பிவிட்டது. ஆனுல் இதற்காக அவன் ராஜியிடம் கோபமோ அருவருப்போ கொள்ளவில்லை. அவள் முகத்தை ஏறிட்டுப் பார்க்க இஷ்டப்படாமல் வேறு புறம் பார்த்துக் கொண் டிருந்தான். எண்ண அலைகள் ஆர்த்தெழுந்தன அவன் உள்ளக் கடலில்.

வண்டி தாம்பரத்தையடைந்தது; தம்பதிகள் இறங்கிச்சென்று வீடடைந்தனர்.

2

“குழந்தைகள் நகை விஷயம் சொன்னேனே கவனித்தீர்களா?”

‘‘என்னத்தைக் கவனிக்கிறது? சக்திக்கு மீறி வேலை செய்தும் ஐம்பத்திநாலு ரூபாய் தான் கிடைக்கிறது. நானும் என்னென்னமோதான் யோசிக்கிறேன்; ஒண்ணும் முடியவில்லையே....பவுன் விற்கிற விலையிலே எதைப் பண்ணுவது? ஒரு பவுனுவதுகூட இருந்தால்தானே வளையலை மாற்றலாம். ராஜி, நீ எவ்வளவோ ஆடம்பர வாழ்க்கையில் வாழ்ந்தவள்; உயர்ந்த நிலையில் இருக்க வேண்டியவள். மிகவும் சிரமப்பட்டுக்கொண்டுதான் இந்தச் சூழ்நிலையில் உழல்கிருய் என்பதை நான் நன்ருக உணர்ந்திருக்கிறேன்; என்ன செய்வது?”

“ அதற்குச் சொல்ல வரவில்லை. நீங்கள் என்னென்னவோ சொல்கிறீர்களே. நான் மிகவும் சந்தோஷமாகத்தான் இருக்கிறேன்....அதிருக்கட்டும்; எனக்கு அப்பா கொடுத்த அந்தக் கைக் கடியாரம் நாலு பவுன் தேறும். அதை அழித்துக் குழந்தைகளுக்குப் பண்ணும் வளையலுக்காகச் சேர்த்துக் கொள்ளலாமென்று பார்க்கிறேன்.”

ராமநாதனுக்குச் ‘சுரீர்’ என்றது. ராஜி இப்படி வாஸ்தவமாகவே கூறுகிருளா, அல்லது விளையாட்டுப்பேச்சா என்று அவனுல் நிர்ணயம் செய்துகொள்ள முடியவில்லை.

“ என்ன ராஜி! நீ நிஜமாகத்தான் சொல்கிருயா? என்னைக் கலியாணம் செய்துகொண்டதன் பலனுக நீ இந்த வாழ்க்கையை அநுபவிக்கிருய். ஆனுல் நீ இந்த நிலையில் பிறந்தவளல்ல என்றும், உன்னதமான உல்லாச வாழ்க்கை என்னும் தடாகத்தில் உதித்த ஒரு தாமரை மலர்தான் நீ என்றும் சதா நினைவூட்டிக்கொண்டிருக்கும் அந்தக் கடியாரத்தை—உன் தந்தையின் அன்பளிப்பை உண்மையாகவே அழித்து விடுவதா? வேண்டாம்; நான் சம்மதிக்க மாட்டேன்! நம் நிலைமை இப்படியே இருந்துவிடாது; நல்ல காலம் வரும்!'' என்று ஆவேசம் வந்தவன் போலக் கூறினுன்.

கடியாரத்தை விற்கக்கூடா தென்று அவன் கூறியது அவள் உள்ளத்தில் மகிழ்ச்சியையே ஊட்டியது. ஆனுலும், மனம் குதர்க்க வாதத்தில் திரும்பாமல் இல்லை. வாழ்க்கையின் தாரதம்மியத்தைப் பிரதிபலித்துக் கொண்டிருக்கும் அந்தக் கடியாரத்தை அவன் வர்ணித்தது அவளுக்குப் பிடிக்கவில்லை. தன்னிடம் துளிக்கூடத் தியாக உணர்ச்சி இல்லை என்று அவன் குறிப்பிட்டதாக உணர்ந்தாள். ஆனுல் தன் மனநிலையைச் சிறிதளவுகூட அவள் வெளிக் காட்டிக்கொள்ளவில்லை.

* * *

எலக்ட்ரிக் டிரெயினில் ஆபீசுக்குப் போகும்போது அந்த வண்டியின் வேகத்தை மிஞ்சிக்கொண்டு எண்ணமிட்டது ராமநாதனின் மனம்.

‘ ராஜியின் போக்கு நியாயமானதுதான்; மனைவி மக்களை அவர்கள் அந்தஸ்துக்கு ஏற்ப எப்பாடு பட்டாவது சந்தோஷமாக வைத்துக் கொள்வது கணவனின் முதல் கடமைதான்! இக் கடமையை உணராதவன் கலியாணம் செய்து

கொண்டு குடித்தனம் செய்ய இலாயக்கற்றவன்! பாமர ஜனங்கள் முதற்கொண்டு அறிந்து வைத்துள்ள இந்த உண்மை எனக்குப் புலப்படாமற் போய்விட்டதே! செல்வத்தின் சிகரத்தில் அமர்ந்து வாழ்க்கை நடத்திய ராஜியை மீண்டும் அந்த நிலைக்குக் கொண்டுவரவேண்டும்!'—

இந்த ரீதியில் எண்ணி எண்ணி ஒரு முடிவுக்கு வந்துவிட்டான் ராமநாதன். அவன் முகத்தில் ஒரு புதிய சோபை ஏற்பட்டது. பல வருஷங்களுக்குப் பிறகு மீண்டும் அவன் முகத்தில் புன்னகை தோன்றியது.

3

அன்றிரவு ராமநாதன் வீடு திரும்பும்போது மணி பத்தரையாகிவிட்டது. எப்பொழுதும் ஏழு மணிக்கு வீடு திரும்பி விடும் அவன் அத்தனை நேரம் கழித்து வந்ததைச் சகிக்க முடியவில்லை ராஜிக்கு.

அவன் வரவுக்காகக் காத்திருந்த அவள் "என் இத்தனை நாழி? நான் என்னென்னமோ எண்ணி விட்டேனே!......அப்பாவைப் பார்க்கப் போனீர்களா?" என்று கேட்டாள்.

"இல்லை, ராஜி; இன்று ஒரு விசேஷம்! உன்னைச் சந்தோஷமாக வைத்திருக்க இனிமேல் சிறிது சாத்தியப்படுமென்று நினைக்கிறேன். டவுனில் ஒரு கம்பெனியில் என்னை 'பார்ட் டைம்' வேலைக்காக அமர்த்திக்கொண்டுள்ளனர். ஒரு மணிநேரம் 'கரெஸ்பாண்டென்ஸு' களைக் கவனித்துக் கொள்ளச் சொல்லி யிருக்கின்றனர். மாதம் முப்பது ரூபாயாவது கிடைக்கலாம்...... ஏதோ நம் குழந்தைகளின் செலவாவதுகட்டிக் கொண்டு போகட்டுமே என்றுதான்...."என்று சொன்ன ராமநாதனை இடைமறித்துக் கூறினாள் ராஜி.

"வர வர நீங்கள் செய்கிறதெல்லாம் எனக்குப் பிடிக்கவில்லை. என்னைச் சந்தோஷப் படுத்த வேணும் என்று ஏதேதோ பேசுகிறீர்கள்...எனக்கென்ன குறைச்சல்? நமக்கு எவ்வளவு வந்தாலும் கட்டாதுதான்; அதற்காக நீங்கள் உடம்பை அலட்டி ஓடாய் உழைக்கவேண்டுமா? காலையில் எட்டு மணிக்கு வீட்டைவிட்டுக் கிளம்பி இரவு பத்து மணிக்கு வந்தால் இந்த உடம்பு எதற்கு ஆகும்? எனக்கும் இந்தக் குழந்தைகளுக்காகவும்தானே இந்தப் பாடு ?"

"இல்லை இல்லை; நம் குடும்பம் உயர்ந்த நிலையில் திளைக்க வேண்டுமென்பதே என் லட்சியம்!"

"என்ன லட்சியமோ! ஒவ்வொரு சமயம் நினைத்தால், நீங்கள் காட்டும் அன்பு ஒன்றே போதும் என்று தோன்றுகிறது. மற்றவை முன் பின்னிருந்தாலும் அந்த விஷயத்தில் நான் கொடுத்து வைத்தவள்தான்! கிடக்கட்டும், சாப்பிட வாருங்கள்."

ராமநாதன் சாப்பிட எழுந்து சென்றான். இருவரும் சாப்பிட்டு முடிந்தபின்னர் மீண்டும் பேசத் தொடங்கினர். கால அளவையும் மீறிய அவர்களது குதூகலமான சம்பாஷணையினூடே, அவர்களது எதிர்கால வாழ்க்கை மலர்ச்சியுடன் உருவாகப் போகிறதென்பதை நிதரிசனமாகக் கண்டு கொண்டனர்.

அவர்களின் அநுமானம் முழுவதும் சரியே! ராமநாதன் வாழ்க்கை வண்டியைப் பாதை திருப்பி விட்டான்! அது ரம்மியமான பாதையிலே பிரயாணம் தொடங்கியது. ஆம்! அவனுடைய புதிய தொழில் அவனுக்கு நிரம்ப ஊதியத்தை அளித்தது. ராஜியின் மனம் மிகவும் சந்தோஷமடைந்தது. தான் எதிர்பார்த்த நிலை வாழ்க்கையில் இப்போதுதான் தலை நீட்டியது என்று கருதித் திருப்தி யடைந்தாள்.

* * *

மூன்று மாதங்கள் கடந்தன.

"இன்னிக்கி டவுனுக்குப் போகணும்; அப்பா வரச் சொல்லி யிருக்கா."

"போய்ட்டு வாயேன்; இதோ நானும் ஆபீசுக்குக் கிளம்பி விட்டேன். நீ சாயங்காலம் நாலு மணிக்குக் குழந்தையுடன் புறப்பட்டுப் போய் வா. வீட்டுச் சாவியை மார்க்கசகாயத்தினுத்தில் கொடுத்துட்டுப்போ" என்று ராஜிக்கு விடை கொடுத்தான் ராமநாதன்.

வேலைகளை முடித்துக்கொண்டு ராஜி டவுனுக்குக் கிளம்பியபோது மணி ஆறுகி விட்டது. ஆறேகால் மணி வண்டியில் ஏறினுள். ரயில் கிண்டி ஸ்டேஷனில் நின்றுவிட்டுக் கிளம்பியபோது திடீரென்று இரண்டு மூன்று குரல்கள் ஆர்ப்பரித்தன.

"டேய்! அடடா! ச்சூச்சூ!"—வண்டியின் உட்புறமும் ஒரே குழப்பம்.

"ஐயோ, பாவம்! யாரோ ஒரு பிச்சைக்காரன்! விழுந்து விட்டான். பாவம்!"— வண்டிக்கு வெளியே அநுதாபிகள் மனம் குழைந்து பேசிக்கொண் டிருந்தனர்.

ராஜிக்குச் 'சுருக்' கென்றது. குழந்தையைத் தன்னுடன் அணைத்துக்கொண்டே வெளியில் ஜனங்கள் பேசிக்கொண் டிருந்ததை உற்றுக்கேட்டாள்.

"ஐயோ, பாவம்! இப்போதுதான் அடுத்த காரேஜில் பாடிக்கொண் டிருந்தான். என்ன இனிமையான குரல்!"

"அவன் பாட்டுக்காகவா ஜனங்கள் பிச்சை போட்டனர்! ஜீவன் ததும்பும் அவன் குரல் அல்லவா எல்லோரையும் தட்டி எழுப்புகிறது!"

"என்ன செய்வது? அவன் கடமையைச்செய்ய முற்பட்டான்! பெண்டாட்டி பிள்ளைகளும் பாழும் வயிறும் இருக்கின்றனவல்லவா!"

பல குரல்கள் இப்படி அபிப்பிராயங்களை வெளியிட்டவண்ண மிருந்தன. வண்டி இந்த இடைஞ்சல் காரணமாய்ச் சிறிது தாமதித்து விட்டு மீண்டும் கிளம்பியது. வேகம் எடுத்து வண்டி முன்னேறிச் செல்லச் செல்ல ஸ்டேஷன் ஆரவாரம் குறைந்துகொண்டே போவதுபோலத் தோன்றி, கடைசியில் ஒன்றுமே காதில் விழாத அளவுக்குத் தேய்ந்தும் போயிற்று. ஸ்டேஷனில் நின்றிருந்தோர் அனைவரின் உருவங்களும் மங்கித் தெரிந்து முடிவில் சிறு சிறு புள்ளிகள்போல் தோன்றின.

ராஜியின் மனத்தினின்றும் இந்தச் சம்பவமும் இதே ரீதியில் மங்கி மறைந்துவிட்டது. பிறந்த வீட்டு நிகழ்ச்சிகளின் சுகங்களில் நிறை மனத்துடன் ஈடுபட்டு, மற்ற எல்லாவற்றையும் மறந்து போனுள் அவள். இரவு மணி பத்தடித்தது. குடும்பத்தினர் எல்லோருடனும் அமர்ந்து ரேடியோவில் இசைத்தட்டு சங்கீதத்தை அநுபவித்துக் கொண் டிருந்தாள்.

4

"ஸார்!"

"யார்?"

"போலீஸ்!"

ராஜியின் தகப்பனுர் கிருஷ்ண சர்மா வாரிச் சுருட்டிக்கொண்டு வெளியே வந்தார். வீட்டில் உள்ளோர் எல்லோரும் பரபரப் படைந்தனர். ராஜியின் நெஞ்சம் துடித்தது.

இரண்டு நிமிஷங்களில் சர்மா உள்ளே ஓடி வந்து, "ராஜி, ராஜி! சற்று வெளியில் வாயேன்!" என்று அவசரமாகக் கூப்பிட்டார்.

வாசல்புறம் ஒரு போலீஸ் கான்ஸ்டபிள் நின்றிருந்தான். அவன் கையில் ஒரு பை இருந்தது.

"இந்தப் பை நம்முடையதுதானு என்று கேட்கிருரம்மா இவர்" என்ருர் சர்மா, ராஜியிடம்.

பையைக் கூர்ந்து கவனித்தாள் ராஜி. அவள் முகம் மாறுத லடைந்தது.

'ஆமாமப்பா! 'அவ'ருடைய பை! இன்று ஆபீசுக்குச்செல்லும்போது அவர் கையுடன் எடுத்துச் சென்ருரே!.... இது எப்படி இவரிடம் வந்தது?

அவர்......அவர்....எங்கே? எங்கே அவர் ?” என்று குழறிக் குழறிக் கேட்டாள். அவள் உள்ளத்தில் பல சந்தேகங்கள் எழுந்தன ; பலவித கற்பனைகள் உருவெடுத்தன.

“ அதைக் கொடுங்கள்!” என்று பையைக் கான்ஸ்டபிளிடமிருந்து வாங்கப்போனாள் ராஜி.

“இதைநான் உங்களிடம் கொடுக்கக்கூடாதம்மா! —அப்படி உத்தரவு! இதை உங்களிடம் காட்டி, நீங்கள் அடையாளம் கண்டுபிடிக்கிறீர்களா என்று பார்த்து வரச்சொல்லி எங்கள் அதிகாரி என்னை அனுப்பினார்....மேலும் இதில் உள்ள உடைகள்....”

“ என்ன! உடைகளா? யாருடையது? அவருடையதுதானா?....அவருக்கென்ன நேர்ந்துவிட்டது? சொல்ல மாட்டேன் என்கிறீர்களே?....” என்று பதறிப்போய், பையினுள் எட்டிப் பார்த்தாள் ராஜி. அதனுள் ராமநாதன் அன்று காலை அணிந்து சென்ற உடைகள் இருந்தன. அவைகளைக் கண்டதும் ராஜிக்குக் குலை நடுக்கம் கண்டது.

“ ஆ! அவருக்கு என்ன?” என்று அலறினாள். அன்று மாலையில் கிண்டி ரயில்வேஸ்டேஷனில் நடந்த சம்பவம் பளிச்சென அவளுக்கு நினைவுக்கு வந்தது.

“அப்பா!” என்று பரிதாபம் கலந்த குரலில் கதறி, அந்தச் சம்பவத்தை விவரித்துச் சொன்னாள். இடையில் போலீஸ் சிப்பந்தி அவர்களைப் போலீஸ் ஸ்டேஷனுக்கு வந்து விவரம் அறிந்து செல்லும்படிக் கூறிச் சென்றான்.

அடுத்த சில நிமிஷங்களில் தந்தையும் மகளும் காரில் போலீஸ் ஸ்டேஷனை நோக்கிச் சென்றனர். போலீஸ் ஸ்டேஷனில் விவரங்கள் கிடைத்தன. ரயில்வே அதிகாரிகள் அந்தப் பையைத் தங்களிடம் ஒப்படைத்ததாகவும் அதில் இருந்த சட்டைப் பையில் ஒரு ‘டைரி’ இருந்ததாகவும், அதிலிருந்து விலாசம் கண்டுபிடித்து, கான்ஸ்டபிளை அவர்கள் வீட்டுக்கு அனுப்பியதாகவும் கூறினர். தற்செயலாக நேர்ந்த அன்றைய மாலை விபத்தில் சிக்கிய மனிதனுக்கும் இதற்கும் ஏதாகிலும் சம்பந்தம் இருக்குமென்று யூகித்தே அவ்வாறு செய்ததாகவும் கூறினர்.

விபத்தில் சிக்கியவர் ஜெனரல் ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுப்பப்பட்டுள்ளார் என்ற செய்தியறிந்து அங்கு விரைந்தனர் ராஜியும் சர்மாவும்.

ஆஸ்பத்திரியில் அநுமதி பெற்று, குறிப்பிட்ட ‘ வார்டை ’ யடைவதற்குள் பிரம்மப் பிரயத்தனமாகவே போய்விட்டது இருவருக்கும். அந்த வார்டை யணுகும்போதே ராஜி துழாவித் துழாவிப் பார்த்துக் கொண்டே சென்றாள். திடீரென்று அவள் குரலொலி கிளம்பியது : “ஐயோ! உங்களுக்கா இப்படி நேர்ந்தது? என்னால் சகிக்க முடியவில்லையே!” என்று கிறீச்சிட்டுக் கதறினாள்.

அந்த வார்டில் தலையிலும் மற்றப் பாகங்களிலும் கட்டுகளுடன் படுத்திருந்தான் ராமநாதன்!

“ஹா! மாப்பிள்ளையா! ஐயோ! ராஜி யூகித்தது சரிதான்!” என்று வியப்பின் மிகுதியால் அலறினார் சர்மா. சப்தமிடக்கூடாதென்வும், நோயாளிக்கு மண்டையில் பலத்த காயமாதலால் அவருக்கு நிம்மதிதான் அவசியமென்றும் அவர்களிடம் வற்புறுத்திக் கூறினாள் அங்கிருந்த ஒரு நர்ஸ்.

இன்னொரு விஷயம் ராஜியையும் சர்மாவையும் தூக்கி வாரிப்போட்டது. பிச்சைக்காரனின் உடுப்பில் காணப்பட்டான் ராமநாதன்! இதென்ன மர்மம்!

விக்கி விக்கி அழுதாள் ராஜி; அவளைச் சமாதானப் படுத்தினார் சர்மா. ராமநாதனும் பலமிழந்து கிடந்த தன் கரங்களால் ராஜியின் தலையை மெதுவாய்த் தடவினான். அவனைக் கூர்ந்து கவனித்தாள் ராஜி.

"ராஜி! ராஜி!" என்று தீனக் குரலில் இரு முறைகள் அழைத்தான் ராமநாதன்.

"என்ன இது? என் இக் கோலம்? எனக்கு ஒன்றும் புரியவில்லையே!" என்றாள் ராஜி.

இரண்டு நிமிஷங்கள் அந்த இடத்தில் மௌனம் நிலவி யிருந்தது. தன் தலையை மெல்லக் கிளப்பி இங்குமங்கும் பார்த்தான் ராமநாதன். ஆஸ்பத்திரி சிப்பந்திகள் ஒருவரும் அங்கில்லை என்பதைப் புரிந்துகொண்டபின் ராஜியிடம் கூறினான். ஆயாச மேலீட்டால் அவன் தட்டுத் தடுமாறிக் கொண்டே தான் பேசினான் :

"ராஜி, என்னை மணந்த உன்னைச் சந்தோஷ மாக வைத்திருக்க நான் என்னென்ன பாடு கள்பட்டேன்! உயர்ந்த குடும்பத்தில் பிறந்த நீ ஒவ்வொரு சமயம் உன்னுடைய எளிய வாழ்க் கையைக் குறித்து மனம் புண்பட்டதை யெல் லாம் நான் ஊகித் தறிந்து உனக்காக மிகவும் இரங்கினேன். நம் குழந்தைகளின் ஸ்திதியை யும் எண்ணியபோது என் உள்ளம் என்னையே குத்திக் காட்டியது...

"என்ன செய்வது? சம்பளத்தைக் கொண்டு நாம் உயர் நிலையை அடைவ தென்பது சாத்திய மில்லை. வேறு வழிகளில் வருவாய் தேடி அலைந்தேன்! அலைந்து அலைந்து பார்த்தேன்! அன்று சொன்னேனே, அந்தக் கம்பெனியில் 'கரெஸ்பாண்டெட்'டாக ஒரு ஒழிவு நேர வேலை கிடைத்தது. மாதம் முப்பது ரூபாய் கிடைத்தது. ஆனால் இரண்டு மாதங்களுக்கு மேல் அந்த வேலை நீடிக்கவில்லை! அவர்கள் வியாபாரம் படுத்து விட்டது. என்னை அனுப்பி விட்டனர்.

"அதன் பிறகு மீண்டும் அலையத் தொடங்கி னேன்! ஏராளமாகச் சம்பாதிக்க இயலாவிடி னும் நமது காலட்சேபத்துக்கும், நீ முகம் மலர்ந்த வாழ்க்கை நடத்தும் அளவுக்குமாவது நான் சம்பாதிக்க வேண்டாமா?......மீண்டும் ஒரு 'பார்ட்டைம்' வேலை அல்லது வருவாய்க்கு ஏதாவது ஒரு வழி கிடைக்குமென்ற நம்பிக்கையில் அலைந்தேன்; ஊஹூம்; பலனில்லை!........

"கடைசியில், ராஜி! என்னிடம் குடிகொண் டிருந்த ஒரு அற்புதமான கலையைப் பிரயோகித்துப் பணம் சம்பாதிக்க நேற்று முதன் முதலாக முயன்றேன். என் வேஷத்தைக் கலைத்து, இந்த வேஷத்தை யணிந்துகொண்டு பிச்சை யெடுப்பது என்று முடிவு செய்தேன்......"—

"என்ன பிச்சையெடுப்பதா? என்ன கொடுமை! ஏற்பது இகழ்ச்சி யில்லையா?" என்று கேட்டாள்.

"எப்படியாகும்? நான் என்ன பொய் சொல் கிறேனா, திருடுகிறேனா? பணம் சம்பாதிக்க வேறு வழியில்லை; என் வருவாய்என்க்குப் போத வில்லை! தீர யோசித்தபின் இந்த முடிவுக்கு வந் தேன்............ ஆனால் இதிலும் தெய்வ சோதனை! தெய்வம் எனக்காகப் பரிந்துகொண்டு, என் கௌரவத்தைக் காப்பதற்காகவே போலும், நேற்று என் வழியில் குறுக்கிட்டது!..........

"நேற்றுத்தான் என் தொழிலை அரங்கேற்றி னேன். என் உடைகளைக் களைந்து என்கைப் பையில் அடக்கம் செய்து, பையை வண்டியின் மூலையில் வைத்துவிட்டேன். பாடிக்கொண்டே பிச்சை யெடுத்துக் கொண்டு வந்தேன். உலகம் என்னைக் கண்டு ஏமாந்துவிட்டது. உழைத்து ஊதியம் பெறக் காத்திருந்தபோது எனக்கு யாரும் ஒரு வேலை கொடுக்க முன்வரவில்லை. நான் பிச்சைக்காரனாக மாறியதும், "ஹா! ஹா! சூ! சூ!" என்ற அநுதாப மொழிகளுடன் சில்லறைகளை :வீசிப் போட்டனர்......

"ஆனால் ராஜி, நேற்று எதிர்பாராதவித மாகப் பக்கத்துப் பெட்டியிலிருந்து நீ இருந்த பெட்டிக்குள் ஏறிவிட்டேன். உன் முகத்தைக் கண்டதும் என் உடல் கூசிவிட்டது. திடீரென்று ஓடும் வண்டியிலிருந்து கீழே குதிக்க முயலும் போதுதான், ராஜி, கீழே விழுந்து விட்டேன்....! கீழே விழுந்துவிட்டேன்! ஆனால் என் கடமையி னின்றும் நான் விழவில்லை......" என்று முடித்தான் ராமநாதன். ராஜியின் தலை சுழன்றது. கால்கள் தடுமாறிப் படுக்கையின் கீழ் சாய்ந்தாள். ராஜியின் தகப்பனார் ஒன்றும் பேசாது நின்றிருந்தார். அவர் கண்களின் ஓரங்களில் இரண்டு முத்துக் கண்ணீர்!

அவர்களுக்கு அளிக்கப்பட்ட நேரம் தாண்டி விட்டது. அதன்பிறகும் அவர்களை அங்கிருக்க அநுமதிக்கவில்லை ஆஸ்பத்திரியின் சிப்பந்திகள். அந்த இடத்தை விட்டுச் செல்ல மனமில்லாமல் சென்றனர் ராஜியும் அவள் தகப்பனார் சர்மாவும். ராமநாதனுக்கு நல்ல முறையில் சிகிச்சை யளிக்கு மாறு தலைமை டாக்டரிடம் கேட்டுக்கொண்டு, வேண்டிய பணத்தைத் தாம் தருவதாகவும் ஒப்புக்கொண்டு வெளியேறினார்கள் அவர்கள்.

ராமநாதன் பலமான சிகிச்சைக்கும் ஏராளமான பணச் செலவுக்கும் பிறகு பிழைத்து எழுந்தான்.

ராஜியின் மனம் நிம்மதி பெற்றது.

5

"ராஜி, உன் கைக் கெடியாரம் எங்கே?"

"கைக் கெடியாரமா?" என்று கேட்டுவிட்டுச் சிரித்தாள் ராஜி.

"அது எப்பொழுதும் சாவி கொடுத்தால்தான் ஓடுகிறது; அதை ஒழித்துவிட்டு நிரந்தரமாக ஓடும் ஒரு உன்னத கெடியாரத்தை வாங்கிவிட்டேன்!"

"என்ன சொல்கிறுய் நீ, ராஜி? எனக்கு ஒன்றும் புரியவில்லையே!"

ராஜி ராமநாதனின் மார்பில் தன் காதுகளை வைத்து, "இந்தக் கெடியாரத்தைத்தான் நான் குறிப்பிட்டேன்! இதே போலப் 'படபட' வென்று என் காதில் அன்பைச் சொரியுமா அந்தக் கெடியாரம்?" என்று கேட்டாள்.

"இன்னமும் புரியவில்லை. கடியாரம் எங்கே?"

"அதை விற்றுத்தான் நான் உங்களுக்கு சிகிச்சை செய்யச் செய்தேன். தனிச் சலுகையுடன் சிகிச்சை செய்ய ஏராளமான பணம் பிடிக்கும் என்றுர் டாக்டர். பணத்திற்கு எங்கே போகிறதென்று விழித்தேன். ஆனல், அப்பாவிடம் பணத்துக்கு நிற்க இஷ்டமும் இல்லை எனக்கு. தவிர, எளிய வாழ்க்கையின் இடையில் ஆடம்பரத்தின் சின்னமாய் இருந்த அதைத் தொலைத்துவிட வேண்டும் என்று எண்ணினேன்; எண்ணியபடியே செய்தேன். இனிமேல் நான் ஒரு சாதாரண குமாஸ்தாவின் மனைவி; நமக்குக் கிடைப்பதைக் கொண்டு திருப்தியுடன் வாழ்க்கை நடத்துவோம்! தங்கள் உயிரை மீட்க நான் என் கடமையைச் செய்ததாக ஒரு சந்தோஷம் என்னுள் நிறைந்திருக்கிறது. என் மனம் கரை காணுத திருப்தியையும் பெற்றுள்ளது. இந்த நிலையை எய்துவோம் என்று நான் எதிர்பார்க்கவில்லை. இதுவே போதுமானது!" என்று மெய்ம் மறந்து உணர்ச்சியுடன் கூறினுள் ராஜி.

அவள் பேச்சை உன்னிப்பாகக் கேட்டுக் கொண்டிருந்த ராமநாதன் ராஜியின் பெருந்தன்மைக் குணத்தையும் சுயகௌரவ உணர்ச்சியையும் கண்டு மனம் மகிழ்ந்தான். ✱

✲ ✲ ✲

உலக வழக்கிலுள்ள தொடர்பைவிட ஆத்மார்த்தமான தொடர்பு அதிக மதிப்பு வாய்ந்தது; ஆத்மிகமான தொடர்பு இல்லாத உலக வழக்கிலுள்ள தொடர்பு உயிரற்ற உடலைப் போன்றது.

—காந்திஜி

உலக வாழ்க்கை ஒரு சாரார்க்குத் துன்பமாக உள்ளது; மற்றொரு சாரார்க்கு அதே நிலையில் இன்பமாகவும் உள்ளது. ஒருவர்க்கு எந்த நிகழ்ச்சி துன்பம் தருகின்றதோ அதே நிகழ்ச்சி மற்றொருவர்க்கு இன்பம் விளைக்கின்றது. 'நண்ணாதார் முறுவலிப்ப நள்ளுற்றார் கரைந் தேங்க, எண்ணாராத் துயர் விளைக்கும் இவை என்ன உலகியற்கை' என்று நம்மாழ்வார் துன்புறுவோர் பக்கமாக நின்று முறை யிடுகின்றார்.

ஓரிடத்தில் துன்பமும், அதை அடுத்த மற்றோரிடத்தில் இன்பமும் காணப்படுமாயின், அந்த நிலைமை வேறு. ஒரு வீட்டில் திருமண வாத்தியமும், மற்றொரு வீட்டில் சாவுப் பறையும் ஒலிப்பது போன்றது அந்த நிலைமை. முன்னதற்குக் காரணம் வேறு; பின்னதற்குக் காரணம் வேறு.



மு. வரதராசனார்

ஆனால், ஓரிடத்தில் உள்ள துன்பத்திற்குக் காரணம் எதுவோ, அதுவே மற்றோரிடத்தில் இன்பம் நிலவுவதற்குக் காரணமாக விளங்கும் போது, அதைக் கண்டு அழுவதா? சிரிப்பதா? ஒருவர் பணப் பையை எப்படியோ இழந்துவிட்டு, இங்கும் அங்கும் தேடிக் காணாமல் சென்று, வீட்டின் மூலையில் சோர்ந்து கிடந்து வருந்துகின்றார். மற்றொருவர் வழியில் நடந்து செல்லும்போது ஏதோ காலில் தடுக்கிக் கீழே பார்த்த போது, ஒரு பணப் பை இருக்கக் கண்டு, எடுத்துக் கொண்டு வீட்டிற்குச் சென்று மனைவியிடம் சொல்லி மகிழ்கின்றார். முன்னதை மட்டும் கண்டவர்கள் பணம் இழந்தவரோடு சேர்ந்து வருந்துவார்கள்; பின்னதை மட்டும் கண்டவர்கள் பணம் கண்டெடுத்தவருடன் சேர்ந்து மகிழ்வார்கள். ஆனால் இரண்டையும் கண்டு, இரண்டிற்கும் காரணம் பொதுவாக இருத்தலை அறிந்தவர்கள் என்ன செய்வார்கள்?

வாழ்க்கையில் இத்தகைய நிகழ்ச்சிகள் பல உள்ளன. ஆனால், இருவகையார் நிலையையும் தனித் தனியாகக் காண முடிகின்றதே அல்லாமல், பொதுக்காரணம் இருப்பதை உணர்வதற்கு வாய்ப்பும் இல்லை; வழியும்இல்லை. அதனால் துன்புறுவாரோடு கலந்து துன்புறுகின்றோம்; இன்புறுவாரோடு சேர்ந்து இன்புறுகின்றோம். உண்மை உணர்ந்து விட்டால், இவ்வாறு மாறி மாறி இன்ப துன்பம் உணர முடியாது. இன்பத்தைப் பெரிதும் பாராட்டாமல், துன்பத்திற்காக மட்டும் நெகிழ்ந்துருகும் நெஞ்சமே இருக்கும். நம்மாழ்வார் பாட்டு இத்தகைய நெகிழ்வையும் உருக்கத்தையுமே காட்டுகின்றது.

இவைகள் எல்லாம் அறிவுடைய மக்களின் வாழ்க்கையில் மட்டும் இருப்பதில்லை; வாழ்க்கைப் பொறுப்பற்ற இளஞ்சிறுவர்களின் வாழ்க்கையிலும் இப்படிப்பட்டவைகளைக் காண்கின்றோம்; வாழ்க்கையைப் பற்றி எண்ணும் ஆற்றல் இல்லாத பறவை விலங்குகளிடத்திலும் இப்படிப் பட்டவைகளைக் காண்கின்றோம். ஆயினும், சொல்லோவியக் கலைஞராகிய புலவர்கள் இவ்வகை நிகழ்ச்சிகளைக் கண்டால் வாளா விடுவதில்லை. அந்தக் காட்சி புலவர்களின் உள்ளத்தை உருக்கி, உணர்வைப் பெருக்கிக் கலைப் படம் தீட்டுமாறு தூண்டுகின்றது. இத்தகைய பகுதிகளைப் பழம் பாடல்களில் அடிக்கடி காணலாம்.

நக்கீரர் ஒரு நாள் கடற்கரைப் பக்கமாகச் சென்று கண்ட காட்சி ஒன்றை இங்கே எடுத்துக் காட்டாகக் கூறலாம். கழியோரமாக நடந்து சென்றார் புலவர். அங்கே பனைமரங்கள் ஓங்கி வளர்ந்திருந்தன. காலை நேரம் அது. பனை மரத்திலிருந்த கொக்கு ஒன்று கீழே வந்து கரையில் மெல்ல இரை தேடிக்கொண் டிருந்தது. அந்தக் கடற் கரையில் வாழும் செம்படவரின் சிறுவர்கள் சிலர் கையில் வலையுடன் வருவதைப் புலவர் நக்கீரர் கண்டார். இந்தச் சிறுவர்களும் மீன் பிடிக்கும் தொழிலில் தேர்ந்தவரோ என எண்ணி, அவர்களின் செயலைக் காண வேண்டும் என அங்கே நின்றார். சிறுவர்கள் மெல்ல வலையை விரித்துக் கொண் டிருந்தனர். அங்கு இரை தேடி நடந்த கொக்கு அவர்களைப் பொருட்படுத்தவில்லை. வீட்டுச் சிறுவர்களைக் கண்டு காக்கையும் அஞ்சாமல் வந்து தின் பண்டங்களைக் கவரவில்லையா? இவர்கள் சிறு பிள்ளைகள் என்றும், இவர்கள் வளர்ந்தவர்கள் என்றும் அறியும் வேறுபாடு பறவைகளுக்கும் விலங்குகளுக்கும் எப்படியோ தெரிந் திருக்கின்றது. சிறுபிள்ளைகளால் துன்பம் நேராது என்று நம்பி அவர்களைப் பற்றிப் பறவைகள் அவ்வளவாகக் கவலைப்படுவதில்லை. அந்தக் கொக்கும் கவலை யில்லாமல், கழியோரம் இரை தேடி நடந்த காரணம் அதுதான். ஆனால், அது ஏமாந்தது. செம்படவச் சிறுவர்கள் விரித்தவலை மீனுக்கு அல்ல, தனக்கே என்பதை அறியாமல் ஏமாந்தது. சிறுவர்களுடைய பெற்றோர்கள் மீன் பிடித்தலைத் தொழிலாகக் கொண்டவர்கள்; ஆகவே, வலையைக் கொண்டு விளையாட அவர்களுக்குத் தெரியாது. ஆனால், சிறுவர்களுக்கு வாழ்க்கை முழுதுமே விளையாட்டுத் தான். ஆகவே, மீன்பிடிக்கும் வலையால் கொக்குப் பிடிக்கவும் அவர்கள் முயன்றார்கள். முயற்சி வெற்றி தந்தது. இரை தேடி வந்த கொக்கு வலையில் அகப்பட்டது. உடனே சிறுவர்கள் அளவற்ற மகிழ்ச்சியோடு ஆரவாரம் செய்து, கொக்கைக் கையில் பிடித்துக்கொண்டு, விளையாடு மிடத்திற்குப் போய்ச் சேர்ந்தார்கள்.

சிறுவர்கள் களிப்புடன் சென்றார்கள். ஆனால், புலவர் நக்கீரரால் அவர்களைப் போல் களிப்படைய முடியவில்லை; அந்த இடத்தைவிட்டும் நகர முடியவில்லை. பசியின் காரணமாக இரை தேடி வந்த கொக்கு அகப்பட்டுக் கொண்டதே என்றும், பறவையின் உரிமை வாழ்வு போயிற்றே என்றும் எண்ணி வருந்தி நின்றார். "பறவையின் வாழ்க்கையில் பெருந்துன்பம்; ஆனால் அதுவே சிறுவர்களின் கொண்டாட்டம்! என்ன உலகம்!" என்று உருகுகின்றார். திடீரென ஒரு கொக்கின் கூக்குரல் கேட்டு, நிமிர்ந்து பார்த்தார். முன் கண்ட அதே பனை மரத்தில் வேறொரு கொக்கு இருந்து கூவுவதைக் கண்டார். "பாவம், அதன் துணையான பெண் கொக்காக இருக்கலாம்" என்று எண்ணிக் கொண்டே வருந்திச் சென்றார்.

வீட்டிற்குச் சென்ற பிறகும், புலவருடைய மனம் ஆறுதல் அடையவில்லை. பல கடமைகளுக்கு இடையே, பல முறை அந்தக் கொக்கின் துன்பத்தை நினைந்து வருந்தினார். மாலையில் கடமைகளை முடித்து, உலாவப் புறப்பட்ட போது, அதே கழி யோரத்தையும், பனை மரத்தையும் நாடிச் சென்றார். பனைமரத்தை அணுகுவதற்கு முன்பே, பெண் கொக்கின் கூக்குரல் கேட்டார். அந்தக் குரலில் துயரமும் சோர்வும் கலந்து ஒலிப்பதை உணர்ந்தார். சிறுவர்களின் கையில் அகப்பட்ட குடும்பத் தலைவன் (ஆண் கொக்கு) வராத காரணத்தால், இந்தத் துணைவி உள்ளம் உடைந்து அழைக்கும் கூக்குரலோ என வாடினார். தன் துணை காலையில் சென்றது முதல் இன்னும் வரக் காணாமையால் அது இரை தேடுவதையும் மறந்து வருந்தியது உணர்ந்தார். கசிந்துருகும் அன்பே ஒலி வடிவு பெற்று, அதன் துன்பக் குரலாக ஒலித்தது.

பனைமரத்தை நெருங்கி வந்ததும், புலவர் உற்று நோக்கினார். ஆண் கொக்கு மட்டும் அங்கே இல்லை. வெண்ணிறமான இளங் குஞ்சுகள் சில அதன் சிறகில் அணைந் திருப்பதைக் கண்டார். "ஐயோ! பெரிய குடும்பம் இது! உணவு கொண்டுவரச் சென்ற குடும்பத் தலைவன் திரும்பிவரவில்லையே! தாயும் குஞ்சுகளும் உணவு இல்லாமல் வாடுகின்றனவே!" என்று நொந்தார். "அந்தக் கொக்கு எங்கேயோ சிறுவர்களிடம் விளையாட்டுப் பொருளாய்க் கிடக்கும். இங்கே இந்தப் பறவைகள் வருந்திக் கலங்க வேண்டுமா?" எனக் கசிந்தார்.

" குடுமிக் கொக்கின் பைங்கால் பேடை
இருஞ்சேற் றள்ளல் நாட்புலம் போகிய
கொழுமீன் வல்சிப் புன்தலைச் சிறாஅர்
நுண்ஞாண் அவ்வலைச் சேவல் பட்டென
அல்குறு பொழுதின் மெல்கிரை மிசையாது
பைதல் பிள்ளை தழீஇ ஒய்யென
அங்கண் பெண்ணை அன்புற நரலும்......"

—அகநானூறு - 290.

[வல்சி - உணவு; ஞாண் - கயிறு; மிசையாது - தின்னமல்; பெண்ணை - பனைமரம்.] ✱

எஸ். வி. ராமசுவாமி

✲

சிவபெருமானின் சிந்தையைக் கவர்வதற்கு அன்னை பாராசக்தி இறுதியாகக் கடுந்தவம் இயற்ற வாரம்பிக்கிறள். அன்னையின் இலட்சியத்தை அலட்சியமாகக் கருதி, அதை அவள் உணரும்படியும் வெளிப்படையாகவே பேசுகிறர், பாராசக்தியினலேயே உபசரிக்கப்பட்ட ஒரு பிரம்மசாரி. அவர் போக்கறிந்து சீற்றம் அடைகிறள் அன்னை! ஆனல், அக் கணமேதான் அவள் தன் தவப் பலனையும் அடைகிறள்.

✲ ✲

அந்தச் செய்தியைக் கேட்ட கன்னியின்மனம் கலங்கியது. பர்வதன் மாளிகையில் தேவதைகளால் அலங்கரிக்கப்பட்ட அவள் தனி அறையில் நிலைக்கண்ணடி முன் நின்ருள். பரமனை யடையப் பல காலம் அவள் கட்டிய கோட்டையின் அஸ்திவாரமே கலகலப்பது போல் அவள் உருவத்தின் பிரதிபிம்பம் சிரித்தது. அது தன் உதட்டோரங்களை ஒரு புறமுயர்த்திப் பரிகசித்தது. கன்னி, அக்கண்ணடியில் செவ்வரியோடி, காதளவு நீண்ட தன் கண்களையும்பூரண எழிலை வீசும் நெற்றியில் சுருண்டு தவழ்ந்து விளையாடும் குஞ்சிகளையும், சிவனுடன் போரிட முன்னேற்பாடாய் மனம் என்னும் நாண் அவள் புருவமென்னும் வில்லை வளைத்துப் பார்ப்பதையும் கண்டாள். ஆனல், கண்ணடிக் கன்னியோ? அந்தப் பிரதிபிம்பமோ?

" அவன் மன்மதனை யெரித்ததைச் சிறிது முன்புதானே கண்டாய்! அதற்குள் அதை மறந்து, உன் உடல் எழிலில் அவன் உன் வசமாவான் என்று நினைக்கிருயா ? பேதாய் ! அவனை யடைய உன் உடலழகுகள் வலியற்றவை; மாசற்ற தவம் செய்து மனத்தை மகாதேவனுக்குக் காட்டு. அவ்வொரு வழியால்தான் அவன் அன்பையும் அண்மையையும் பெறுவாய் " என்றது.

பார்வதி குதித்தெழுந்தாள்! கன்னிக் குமரி குளிர்ந்தாள். தங்கத்தை ஒளியாலும் வலியாலும் பழிக்கும் அவள் உடல் மன ஒளியையும், வலியையும் வெளிக்காட்டி வீசியது.

'தவம்! தவம்! கடுந்தவம் செய்வேன்! தவத்தழகு கூட்டி என் தளிருடலே யவன் ஏற்கச் செய்வேன்! என்னுடல் தணிப்பேன்! தவ மொன்றே ஒப்பற்ற அன்புடன் உலக முதல்வனை எனக்குத் தர வல்லது. அனங்கா! என்னை யவர் காதலிக்க நீ கனல் வளர்த்தாய்-ஊதினாய். ஆனால் — ஆனால் — அம் முயற்சியில் என் கண் முன்பாகவே எரிக்கப்பட்டாய்! ஆனால் அப்படித் தவத்தைச் சாம்பராகச் செய்யான் சாம்பசிவன்!' என்று தன்னுள் தீர்மானித்தாள்.

பார்வதி பல தேவதைகளும் கண்டு வருந்த மரவுரி தரித்தாள்! ஆம்; பார்வதியே தான்! பர்வதன் குமரி! அழகின் சிகரம்! ' அமரர் அழகுத் தெய்வ' மென்று போற்றப்படும் பார்வதிதான்!— ஜபமாலை, ஜடை!

" ஆஹா! நம் கன்னியா— சுகுமாரியா இந்தத் தவம் செய்வது? ஊன்றிய பார்வை தாங்காது, அதனாலேயே கண்ணெச்சில் பட்டுக் கருகும் சுகுமாரியாகிய நீயா தவமிருப்பது? வண்டைத் தாங்கும் மலர், வனப் புட்களைத் தாங்க வல்லதா? கலனின்றிப் புலனழிய, ஊணின்றி உடல் உலரக் கான் நின்று தவம் செய்தல் நீயா? பார்வதி! வேண்டாம்! வேண்டாம்! இது என்ன பித்து?" என்றாள் அவள் தாய் மேனா தேவி.

வானிழிந்து வரும் கங்கைபோன்ற கன்னியின் தவ வேட்கை தணிக்கற்பாலதோ? தன் தந்தையின் ஆசிகொண்டு, இரு சேடியர் பின் தொடர, ஜபமாலை, கமண்டலம் இவைகளைப் பூணக் கொண்டு, இடியைப் பிடிக்கச் சென்றது 'இளமான்'! அன்னைக் குமரி பாலாவைக் கண்டு பல்லுலகங்களுமேதவக்கோலம்கொண்டனவோ? பிற்காலத்தில் அவள் தவப் பெயரால் விளங்கப் போவதாகிய கௌரிச் சிகரத்தை யடைகிறாள். மயில்கள் வரவேற்கின்றன. பரிசுத்தமான அவ்வனத்திடை, தவச் சாதனைகள் நிறைந்த பர்ணசாலை அவளிருப்பிடமாகிறது. கனிகளும், பூக்களும் கூடிய செடி கொடிகள் அவள் மேற்கொண்ட தவத்தை மெச்சி விளங்கின; தவத்தை நாடிய அவள் நீராடினாள். வேள்வித் தீ மூட்டினாள்—எல்லா வேதங்களும் உண்மை யுருக்கொண்டு, பற்பல ஒலியங்களாக, அவைகளின் இருப்பிடமாகிய அவள் கண்டத்திலிருந்து நாதவடிவாய்க் கிளம்பின—இவ்வாறு தவம் தொடங்கியது.

தான் மெய்வருத்தம் பாராது செய்யும் தவம் போதாது என எண்ணித் தன் மெய்ம் மறந்த தவத்தை மேற்கொண்டாள். ஆஹா! தவம் தாங்கும் உடலா அது? சிறிது நேரம் ஒய்யாரமாய்ப் பந்தடித்ததால் சோர்வு காட்டும் அவ்வுடல் தங்கத் தாமரையினாலாக்கப்பட்டதோ? இன்றேல், தாடி மீசையுடன் ஹுங்காரம் செய்து அடம் பிடித்து நிற்கும் காட்டு ரிஷிகள் செய்யவேண்டிய தவத்தை அவள் கையாள முடியுமா?

நடுவேனிற் காலம் : கதிரவனின் கடுமை! அக்கினி நடுவே அம்மையின் தவம்! தாமரை மலரும் அவள் வதனமும் புன்முறுவல் பூத்து மலர்ந்தன! வெப்பம் ஏற ஏறத் தாமரை இதழ்களின் நுனிகள் ஒரு சிறிதளவு வதங்கிக் கருக வாரம்பித்தன. அம்மையின் மலர்ந்த கண்கள் 'சிறிது வதங்கி, மை யேற்று நின்றன போல் கருகின. சுத்த நீர், சந்திரன் பொழியும் அமுதநிலா, நறுமணக் காற்று இவைகளையே உணவாய்க்கொண்டு ஏனைய செடி கொடிகளைப் போல் அக்கொடியும் உயிர்நின்றாள்! தன் வாழ்க்கைக் கொழுகொம்புக்குத் தவம்செய்துநின்றாள்!

இளம் மழைக் காலம்: வான் வெப்பமும் கான் வெப்பமும் தணிந்தன; மேகங்கள் கூடின; மயில்கள் தோகை விரித்தாடின. தன் வெப்பத்தைப் பெருமூச்சினால் விரட்டினாள் கன்னி.

மழைக் காலம்: கடுமழை பொழிந்தது. மீண யின்றிப் பாறையில் படுத் துறங்கும் பார்வதியின் நிலே கண்டு மின்னல்கள் சிரித்து, அவள் மெய்த் தவத்திற்குச் சான்று கூறின!

இளம்பனி: இரவில் ஒன்ருேடொன்று அருகி லிருப்பதையும் காண இயலாது கூவி யழைக்கும் சக்கிராப் புட்களுக்கு இரங்குகிருள் அன்னே! குளிரி ஞல் துடிக்கும் அவள்தம் உதடுகள் தம் நிலேயை மறந்து, பிறர் துக்கத்திற்கு ஆறுதல் கூற முற் படுகின்றன! என்னே உத்தம குணம்! பிறர் துக் கத்தில் தன்னிலே மறந்து தவிப்பது!—உலக மாதாவல்லவா அவள்?

கடும்பனி: பொய்கையில் பனி தாங்காது தாமரைகள் நசிக்கின்றன; பொய்கை நடுவே நீரில் நின்று ஜபிக்கும் பாலாவின் முகத்தாமரை 'இன்னும் தாமரை நசிக்கவில்லே' என்று காட்டியது போலும்.

சருகுதிர்க் காலம்: "சருகற்றவள்" [அபர்ணே] என்ற கன்னியின் பெயர் காரண இடுகுறிப் பெயரோ? ஆம் அப்படித்தா னிருக்க வேண்டும். தவம் மேற் கொண்டவர் கள் தின்னும் சரு கைக் கூட இவள் உண்பதில்லேயே!

*   *   *

அவளுடைய தவம் வலுத்தது.

அன்று அவ் வனத்தில் ஒரு விசேஷம்! மான் தோல், பலாச தண்டம், வேதங்களின் ஒளி வீசும் முகத்தில் தவப்பொறி மிளிரும் கண்கள், மாசற்ற நிலேயையும், மாதவத்தையும் வெளிக்காட்டும் விபூதி ருத்திராட்சம்-இவை சகிதம் ஒரு பிரம்ம சாரி அவ்வனம் புகுகிருர். நேராகப் பார்வதி இருப் பிடம் வந்து சேர்ந்தார். அவள் மெய்த் தவத் தைக் கேள்வி யுற்றவர் போலும் அவர்!

தவத்தால் பொலியும் அவரைப் பார்வதி தனிப் பரிவுடன் உபசரித்து வரவேற்ருள்.

தனிப் பரிவு ஏன்? நெருப்பில் சிறியது—பெரி யது உண்டோ? தவத்தில் இறங்கியவர்களுக்குள் வேற்றுமை யுண்டோ? இல்லே; ஆனுல் அவரிடம் வீசிய ஒளி தவப் பெருமையைக் காட்டவும், அதை மரியாதையுடன் வரவேற்கிருள் சக்தி! தனிப் பரி வின் உணர்ச்சிதான் இது!

பார்வதியின் நிலை கண்டு மின்னல்கள் சிரித்து........

உபசரிப்பை அங்கீகரித்து, ஒரு கணம் இளைப்பு நீங்கி, சக்தியை நேர்ப் பார்வையால் கண்டு, கம்பீர மான முறையில் ஆய்ந்தெடுத்த சொற்களால் விசாரிக்கிறார் பிரம்மசாரி:

"மாதே! தவத்திற்கு இங்கு எல்லா வசதிகளும் உள்ளனவா? தருப்பை, பலாசை, ஸமித்துகள், ஸ்னானபானாதி வசதிகள் இவைகளுக்குக் குறைவு இல்லையே? நீ ஒரு சுகுமாரியான பெண்; தர்ம சாதனைகளுக்குச் சரீரமே முக்கியமாகும் என் பதை அறிந்து உன் சக்திக்கு எற்றபடிதானே தவத்தி லீடுபடுகிறாய்?

"இயற்கையில் வெறுப்பும், உன் தவத்தில் குறுக்கிடும் மான்களிடம் கோபமும் காட்டாது உன் மனம் தெளிந் திருக்கிறதா? உன் கண்களை யபிநயிக்கும் அம்மான் விழிகளைக் கண்டு சாந்தி அடைகிறாயா?

"உன் உயர்ந்த நோக்கமும் பிறப்பும் உன் அழகும் நல்வழிக்கே எற்பட்டன என்பதை இத் தவம் விளக்குகிறது.

"பொருள் இச்சை, உலக சுகம் இவை களை விடுத்து, தருமத்தைக் கருதியே தவம் செய்பவளாக நீ காணப்படுகிறாய். உன்னால் நன் றாக உபசரிக்கப்பட்ட நான் உன்னில் வேற்றுவ னாகக் கருதப்படவேண்டாம். என் போன்றவர்

........தனிப்பரிவுடன்
உபசரித்து வரவேற்றாள்......

உன் தவ இரகசியத்தை யறிய ஆவல் கொள்வது இயற்கை. நான் சொல்பவைகளைக் கவனமாய்க் கேட்டுக்கொண் டிருந்து, பின் நான் கேட்பவைகளுக்குத் தக்க பதில் கூறவேண்டுகிறேன்......

"உன் பிறப்போ, முதலவன் வழி; உடலோ, எல்லா உலக எழிலையும் திரட்டிக் காட்டுவது! ஐசுவரியமோ, பர்வதன் பூமியில் சிந்தியவையே குபேரன் பொக்கிஷமாகிறது. எனவே, அச்சுகத்திற்கும் குறைவில்லை. இதற்கு மேலான தருணமும், யௌவனமும் எவ்விதத் தவமும் அளிக்க வல்லதில்லை. கட்டாயத்தினால் உன்னையடைய எவரேனும் முயன்று அவமதித்தனரோ?—இல்லை; என் என்றால், அது நடத்தற்கரியது. களங்கமற்ற உன் முகம் அதைக் காட்டவில்லை. மஹா வீரனான பருவதன் மாளிகையில் உன்னை ஆக்கிரமிக்க முற்படுவது மாணிக்கத்தை வேண்டி அரவு வளையில் கையிடும் மதியீனத்தை யொக்குமே. இவ்வாறாக சந்திரனாலும், விண் மீன்களாலும் பிரகாசிக்கும் தண்ணிரவு விடிந்த பின்புள்ள சூரிய வெப்பத்தை நாடுவதுபோல், கலனின்றி உடல்வாட நீ கன்னித் தவம் செய்வதன் கருத்து? சுவர்க்கம் வேண்டியோ ?

"சுவர்க்க போகமென்பது உன் தகப்பன் இமயத்தில் அமரர்களுக்கு அளிக்கும் ஒரு நிலை தானே! அதற்கு நீ தவம் செய்யவேண்டுமா ? ஆம்; உன்னுடைய சில பெருமூச்சுகள் நீ ஒரு மணாளனைத் தேடுகிறாய் என் றுரைக்கின்றன! உனது அழகிய காதை யடுத்த கபோல நடுவில் செந்நிறத் தானியம் போல் அவிழ்ந்து தொங்கி விளையாடும் உன் அளகபாரங் கண்டு மதிக்காதவனும் உண்டோ ? உன் தவத்தைக் கண்டு உருகாதவனும் உளனோ ? இது என்ன ஆச்சரியம்! அவ்வாறாயின், அவன் தன் கர்வத்தால் உன் முகத்தை உற்றுக் காணாது ஏமாந்தவனாகிறான். பார்வதி! நீ தவத்தில் சிரமப்படுவதைக் காண மனம் சகிக்கவில்லை. என்னிடம் நான்

இதுகாறும் சம்பாதித்த தவப்பலன் உளது. அதில் ஒரு பகுதியை யளித்தேனும் உன் கோரிக்கையை ஈடேறச் செய்கிறேன். நீ வேண்டும் வரத்தை யறிய விரும்புகிறேன் — சொல்'' என்று முடித்தார் பிரம்மசாரி.

பிரம்மசாரியின் வார்த்தைகளின் பல்வேறு பொருள்களுக் கேற்ற முகபாவத்தைத் தோற்றுவித்துக் கொண்டிருந்த பார்வதியின் இதழதரம் அவருடைய கடைசிச் சொற்களைக் கேட்டதும் ஒரு வெட்கப் புன்னகை பூத்தது. கண் விழிகள் அவர் கேள்வியை அங்கீகரிப்பன போல் சுழன்று, கடையில் நின்று, அப் பக்கம் நின்ற தோழிக்கு 'சொல்' என்றுசமிக்ஞை காட்டின. கருத்தறிந்த தோழி அப் பிரம்மசாரி யறியச் சொல்லுகிறாள்:

''சுவாமி! ஐசுவரிய போகங்களின் எல்லை கண்ட திக்பாலகர்களைத் தள்ளித் தன்னை யண்டிய மன்மதனைக்கடிந்து எரித்த மாதேவனை இவள் தன் சௌந்தரியத்துக்கு வசமாக்க நின்றாள்.''

''சௌந்தரியத்துக்கு வசப்படுபவனா அவன்?'' என்று குறுக்கிட்டார் பிரம்மசாரி.

''அவனால் கடிந்து துரத்தப்பட்ட அனங்கனின் அம்பு இவள் மார்பைத் துளைத்து நின்றது. தன் தந்தை வீட்டில் இவள் கொண்ட காம வெப்பம் சந்தனக் குழம்பாலும் பனிக்கட்டிப் படுக்கைகளாலும் கூடச் சமனமடைவதாயில்லை. அவன் சரித்திரத்தைக் கண்ணீருகுத்துப் பாடி, கின்னர மங்கையரையும் தன்னுடன் அழ வைப்பாள் தன் இன்னிசையால்.

''பின்னிரவுகளில் **'ஏ நீலகண்டா நில்!'** என்று கூவி யெழுவாள். அர்த்தமற்றசொற்களும் பாவனைகளும் அப்பொழுது காணப்படும். சிவனுருவம் எழுதுவாள். 'ஒரு பெண்ணின் மனமறியா உனக்கா உலகோர் 'சர்வ வியாபி' என்று பெயரிட்டனர்?' என்று ஏகாந்தத்தில் அப்படத்தைப் பழிப்பாள்...

''இந்த நிலையில் உபாயமற்றவளாய்ப் பரமசிவனையடையத் தன் தந்தை உத்தரவு பெற்றுத் தவம் மேற்கொண்டாள். இவ்வனத்தில் இவள் தவத்துக்குச்சாட்சிகளாய் எல்லா மரம் செடிகொடிகளும் அவள் கை நீரேற்றுப் பூத்துப் பழுக்கின்றன. ஆனால் அவள் மனத் தெழுந்த காலாந்தகனின் காதல் என்னும் முளை மட்டும் துளிர்க்கவேயில்லை! கடின சித்தமுள்ள அச் சிவன் தன் அன்பு மழையால், வறண்ட பூமியை இந்திரன் அருள் சுரந்து பண்பு படுத்துவது போல், துளிர்த்துப் பூக்க வைப்பாரோ, அறிகிலேன்'' என்றாள் தோழி.

இதைக் கேட்ட பிரம்மசாரியின் மனம் குளிர்ந்தது; ஆனால் வெளிக் காட்டவில்லை. ''ஏ, பார்வதி! உன் தோழி சொல்வது உண்மைதானா? அல்லது சிறு பெண்களுக் குரிய குறும்புப் புரளியா?'' என்றார்.

ஜபமாலை கொண்ட கன்னிப் பார்வதி மெது வாய்ப் புன்னகை மறைத்துக் கூறினாள்: ''வேத மறிந்தவரே! உண்மையையே கேட்டீர்—அந்த ஸ்தானத்தை யடைய ஆசைகொண்டேன். தவமே அதற்குச் சாதனமென்றறிந்து கைக்கொண்டேன். ஆசைக்கோரளவில்லை யல்லவா?''

''இப்போது நேரில் காணும் உன்னைப்போல், நீ சொல்லும் பரமசிவனையும் நான் அறிவேன். ஆனால், உன் ஆசைதான் எனக்குப் புரியவில்லை. ஈடேறாத விஷயங்களில் பிடிவாதம் காட்டும் பெண்ணே! கேள்; பாம்புகளை வளைகளாக அணிந்துள்ள அவன் கை முதல்முதல் உன் மங்களக் கையைப் பிடிக்கும்போது என்ன உணர்ச்சி கொள்வாய்? அதைச் சகிப்பாயா?....

''அன்னக்குறி காட்டிச் சரிகைத் தலைப் பமைந்த உன் மெல்லிய பட்டாடையையும், ஈர உதிரம் சொட்டும் யானைத் தோலாகிய அவன் மேலாடையையும் சேர்த்துச் சிந்தனைகூடச் செய்ய முடியாதே!

"நிலவு தோய்ந்த அரண்மனை முற்றங்களில் மலர்மேல் நடக்கும் உன் செம்பஞ்சுக் குழம்பூட்டிய பாதம், சாம்பல் பறக்கும் மயானங்களில் படுதல் விரோதியும் சகிக்காத விஷயமன்றோ?"

இப்படிச் சொல்லிவிட்டுப் பிரம்மசாரி மெதுவாய்ச் சிரிக்கிறார்.

"ஒன்றை நினைத்தால் எனக்கே சிரிப்பு வருகிறது. பட்டத்து யானைமேல் எல்லா அலங்காரங்களோடும் மணக்கோலத்துடன் செல்ல வேண்டிய உன்னை அந்தக் கிழ எருதின்மேல் காணும் ஜனங்கள் கைகொட்டிச் சிரிக்காமல் என்ன செய்வார்கள்?..

"அன்று மதி அவன் சடையை யடைந்து களை மங்கியது; இன்று உலகத்துக்கே சந்திரன்போன்ற நீயும் அவ்வாறுவதா ?..

"விகாரமான நேத்திரங்களை யுடைய முகம் !—என்ன அழகு!—உடுக்கவும் உடையற்ற ஐசுவரிய நிலை! பிறப்போ? தாய் தந்தை யற்றவன்! மான் விழிகொண்ட பார்வதி, இந்த முக்கண்ணனிடம் என்ன நலம்தான் கண்டனையோ? அழகைவிரும்பும் மணமகள் அவன் முக்கண்களைக் கண்டஞ்சாளோ? ஐசுவரியம் தேடும் அவளன்னை பிச்சையெடுக்கும் அவன் கைக் கபாலத்தைக் கண்டாலே போதும்! ஞானத்தைக் கோரும் அவள் தந்தை, 'இவன் எந்த ஆசானிடம் கல்வி பயின்றான்?' என்று கேட்கமாட்டானா? நல்குடிப் பிறப்பை வேண்டும் பந்துக்கள் 'இச் சிவனுக்குத் தாய்

தந்தை யார்?' எனக் கேட்டால் என்ன சொல்வாய்? வயிறுற விருந்து வேண்டும் மற்றவர்களுக்கு, தானே பிச்சை கொள்ளும் இச் சிவன் எங்கிருந்து விருந்திடப் போகிறான்?..

"பார்வதி! ஒருவிதத்திலும் மேன்மை காணப்படவில்லையே! மங்களையான நீ அந்த அமங்களரூபனை அடைவதொவ்வாது. யாகத்தில் நிறுவிய கம்பத்துக்குப் பூசை செய்வதை மயானத்தில் நிறுவிய சூலத்துக்குச் செய்வார்களா? வேண்டாம், உன் மனத்தைத் திருப்பு!"

பார்வதியின் உதடுகள் துடித்தன; கடைக் கண்கள் சிவந்தன; புருவங்கள் நெற்றிக் கேறின.

"ஹே பிரம்மசாரி, உண்மையில் நீ பரம சிவனையறியவில்லை. ஏனெனில், மந்த மதியுள்ளவர்கள்தான், அவர்களால் அறிய முடியாத பெரியோர்கள் சரிதையைப் பழித்துப் பேசுவார்கள். நீ சொன்ன சுபகாரியங்களும் விதிகளும், ஐசுவரியம் வேண்டுபவர்களும், ஆபத்தைத் தேடுபவர்களும் மேற்கொள்ளும் விதிகள் அன்றோ? இந்த மங்களச் சிவன் அவ் விச்சைகள் அற்றவன் என்று நீ அறியவில்லை. அவனுடைய தரித்திரத்திலிருந்தே எல்லா ஐசுவரியங்களும் உண்டாகின்றன. தான் மயானத்திலிருந்துகொண்டே மூவுலகிற்கும் அதிபனாகிறான். பயங்கர ரூபமுடைய அவனே 'அழகன்' என்று பலரால் அழைக்கப்படுகிறான். சிலரே சிவனுண்மையை அறிவர்.

"மூவுலகங்களுமே உடலாய் விளங்குமவனுக்கு அணிகலன்கள் இவையென்று நிர்ணயிக்க முடியுமோ? பிரகாசிக்கும் ஆபரணங்களை யணிவான்; பாம்புகளையும் அணிவான்! பட்டாடை யுடுத்துவான்; யானைத் தோலையு முடுப்பான்! கபாலம் கைக் கொள்வான்; பிறையு மணிவான்! எதைச் செய்தாலும் வரம்புண்டோ?

"அவன் தாண்டவ நடனத்தி லுதிர்ந்த மயானப் பொடி தேவர்களின் சிரங்களால் துடைக்கப்பட்டுப் போனதை யறியீர். ஐசுவரிய சிகரத்தில் வாழ்ந்து வெள்ளானை ஏறும் இந்திரன் முடிபட்டு அக்கிழ எருதில் ஏறித் திரியும் பிட்சாடனரின் பாதங்கள் சிவந்துள்ளதை நீர் ஏனோ காணவில்லை? நீர் ஒரு உண்மை கூறினீர். அவன் பிறப்பற்றவனே! ஆம்; தானாக உண்டாகிப் பிரமன் மூலம் எல்லாச் சிருஷ்டிகளையும் நடத்துமவன் யாரால் சிருஷ்டிக்கப்படுவான்? அவன் பிறப்பை யறிய வல்லுநர் யார்?..

"ஹே பிரம்மசாரி! — போதும்; வாதமேன்? மனங்கொண்ட பொருளை யடையத் துணிந்தவர் நிந்தையைப் பாராட்டுவார்களோ? போதும்!"

இவ்வாறு உரைத்த பார்வதியிடம் கோபக் குறிகள் தோன்றின. தன் தோழியைக் கண்டாள்.

"தோழி, இந்தப் பிரம்மசாரி மேலும் ஏதோ சொல்ல முற்படுகிறான்போல் தோன்றுகிறது. பெரியோரைப் பழித்துப் பாவமடைபவன். அதைக் கேட்கும் நாமும் பாப முறுவோம்" என்று கூறிய அவள் அப்பிரம்மசாரி இலகுவில் போகாதவன் என்று கண்டனள் போலும். 'சடக்' கென முகத்தைத் திருப்பிக்கொண்டு எழுந்தாள். அவ்வேகத்தில் திரும்பிய அவள் மார்பின் ஆடை சரிந்து விழுந்தது; மறுகணம் அவள் கை பிடிக்கப்பட்டது! துடிதுடித்துத் திரும்பினாள்—!

அறிவிழந்தாள்; நடுக்கங்கொண்டாள்; உடலெல்லாம் வேர்வையுற்றாள்; தான் பின் செல்லப் பெயர்த்த அடியைப் பின்னே வைப்பதற்கு முன், மலை தடுத்துச் சுழலும் நீர்ப் பிரவாகத்தையொத்துச் சுழன்றது அவள் மனம்! ஏன்?

அவள் கையைப் பிடித்தவர் பிரபு! அவளின் பிரபு! அவரைக் கண்டுவிட்டாள். அவர் மந்தகாசப் புன்னகை பூண்ட முகம் அவளை அந் நிலையில் விட்டது.

"அணங்கே! உன் தவம் என்னும் விலை தந்து என்னை நீ அடிமை யாக்கிவிட்டாய்! இன்று முதல் நான்....உன்..வசம்" என்று புன்முறுவலித்தார், கணப் பொழுதில் உரு மாறிய ஆதிசிவன்!

பார்வதி தன் தவப்பலனைக் கண்டதால் தவக் களைப்பைப் போக்கிக் கொண்டாள். பலன் கிட்டிய பிறகு—தவம் பலித்த பிறகு — களைப்பும் நிலைக்குமா? ✱

✲

வாழ்க்கையில் பணக்காரனாவதற்கு இரண்டே வழிகள் தாம் உள்ளன; ஒன்று, வருவாய்க்குத் தக்கபடி குறைவாகவே செலவு செய்தல்; மற்றொன்று, செலவுக்குக் கண்டு மிஞ்சுமாறு உழைத்துச் சம்பாதித்தல். வேறு குறுக்கு வழிகளில்லை.

தீராத விளையாட்டுப் பிள்ளை

சி. வ. ரா.

✲

தீராத விளையாட்டுப் பிள்ளையாகிய கண்ணனின் திருவிளையாடல்களுக்குப் பொருள் உணரும் சக்தி பெற்றிருந்தான் ததிபாண்டகன் எனும் ஏழை இடைச் சிறுவன். மற்றவர்களுக்குக் கிட்டாத பெரும் பேற்றை அவன் கண்ணனின் உண்மை சொரூபம் கண்டதன் மூலம் அரை விநாடிக்குள்ளாக அடைந்து விடுகிறான். எளிய நடையில் இக்கருத்தை அழகாகச் சித்திரித்திருக்கிறார் ஆசிரியர்.

✲

கண்ணனின் விளையாட்டுகளுக்குக் கணக்கில்லை!

அவைகளைத் தங்கள் அகக்கண்களினால் கண்டு சித்திரிக்காத கவிகளும் இல்லை. அவன் விளையாட்டுகளைக் கேட்டுச் சிறுவர்கள் மகிழ்கிறார்கள்; பெரியோர் உள்ளம் கரைகிறார்கள்; அறிவாளிகள் பல வாழ்க்கைத் தத்துவங்களைக் கண்ணன் விளையாட்டிலேயே காண்கிறார்கள்! ஞானிகளோ, பிரும்ம நிர்ணயம் செய்து அலகிலா விளையாட்டுடையார் இவர்தம் விளையாட்டுக் கருவிகளல்லவோ எல்லா அண்டங்களும்" என்று நினைத்து ஆனந்தக் கண்ணீர் வடித்துப் பெருமூச்செறிகிறார்கள்!

இந்த வகைகளில் எதைச் சேர்ந்தவனோ நமது ததிபாண்டகன்? தயிர் விற்கும் இடையன்! எல்லாரும் பார்த்து நகைக்கும் கோமாளி! ஒளியிலும் உருவத்திலும், ஊளைச் சதை மிகுந்த இவன் உடல் ஒரு தயிர்ச் சட்டியை ஒத்திருந்ததால் "ததிபாண்டகன்" என்ற காரணப்பெயர் பெற்றான் போலும்!

✲

சாந்தீபரிடம் கண்ணன் சுதாமனோடு சென்று கல்வி பயின்று வந்த நாள் அது. மதுரைப் பதியில் ஒதுப்புறமாய் இருந்த சாந்தீபரின் ஆசிரமத்தை நாலைந்து தெருக்கள் கடந்தே அடைவார்கள் பிள்ளைகள். ஒவ்வொரு நாளும் எதா

வது தின்றுகொண்டே தங்கள் சுவடிகளைத் தாங்கிக் கோஷமிட்டுப் பரிகாசமும் விஷமமும் செய்து செல்லும் கண்ணனும் அவன் கூட்டத்தாரும் ஓர் உயர்தர சித்திரக் காட்சியையே பார்ப்போர் மனத்தில் பதிய வைத்தனர்.

அங்கு ஒரு தெருவில்தான் ததிபாண்டகன் வீடுஇருந்தது. நடக்கவும் சக்தியற்ற அவனுடைய பருத்த சரீரமும், சட்டி வயிறும், மொட்டைத் தலையும், யாருக்குமே சிரிப்பையுண்டுபண்ணும். விஷமமே கருத்தாய் உள்ள இப் பிள்ளைகளுக்குச் சொல்ல வேண்டுமா? அத்தெருவில் புகுந்ததுமே, "தயிர்ச்சட்டி!" என்று கண்ணன் கத்துவான். அவனைப் பின்பற்றி எல்லோரும் "ஏ, தயிர்ச் சட்டி! தயிர்ச்சட்டி!" என்று கத்துவார்கள்.

வொரு நாளும் காலையும் மாலையும் வாயிலில் காத்திருப்பான். "தயிர்ச்சட்டி!" என்று கண்ணன் குரல் கேட்டதும் பரவச மடைவான். கண்களை மூடுவான்; அவ்வளவுதான்! தன்னைச் சுற்றிக் குழந்தைகள்! கண்ணன் அவன் சட்டிபோன்ற வயிற்றைக் கிள்ளுவான். மொட்டைத் தலையில் குட்டுவான். சதையைக் குலுக்கிச் சிரிப்பான்! தயிர்ச் சட்டி மெதுவாகக் கண்களைத் திறந்து, ஆனந்தக் கண்ணீரோடு கண்ணனைக் காண்பான்! அக்கண்கள், "எல்லாம் தெரியும் கண்ணா! செய்! செய்! பரிகாசம் செய்! ஒருநாள் நீ என்னிடம் அகப்படுவாய்!"

அவ்வளவுதான்! ஒரே கொம்மாளம்! அவனைச் சுற்றி எல்லாப் பிள்ளைகளும் நின்று விதவிதமாய்ப் பரிகாசம் செய்து விளையாடுவார்கள். அவனைக் கண்ணன் செய்யும் கிண்டல்கள் கணக்கற்றவை. தயிர்ச்சட்டியோ மட்டிலா ஆனந்தம் கொள்வான். கண்ணனையும் அவன் கூட்டத்தையும் எதிர்பார்த்து ஒவ்

என்று சொல்லிச் சிரிக்கும். இப்படிப் பல நாட்கள் சென்றன.

அன்று பள்ளியிலிருந்து வரும்போது 'கண்ணாமூச்சு' ஆடிவருகிறார்கள் பிள்ளைகள். ஒருவன் கண் பொத்தப்பட்டது. எல்லோரும் ஓடி ஒளிந்து கொண்டார்கள். கண்ணனுக்கு இடம்? அங்குமிங்கும் ஓடினான்; இடம் கிடைக்கவில்லை. சிறிது

தூரத்தில் வேடிக்கை பார்த்து நின்ற தயிர்ச்சட்டியைக் கண்டான் கண்ணன். ஆர்வத்துடன் அவனிடம் ஓடினன்.

"தயிர்ச்சட்டீ! சீக்கிரம், சீக்கிரம்—என்னை எங்காவது ஒளித்துவிடேன்—அதோ அவன் வந்துவிடுவான்! உம்!" என்று பரபரப்புடன் கேட்டான்.

"உன்னையா? ஒளிப்பதா! ஆஹா....உம்!"

தயிர்ச்சட்டி ஒரு புன்னகையோடு எழுந்தான். தூக்க முடியாத தன் உடலைத் தூக்கிக்கொண்டு, கண்ணனை ஒரு கையில் பிடித்துக்கொண்டு, அங்கு வைக்கப்பட்டிருந்த ஒரு பெரிய அரிசிச் சாலிடம் சென்றுன்.

"உம்! உள்ளே நுழை!" என்று இடம் காட்டினான்.

கண்ணன் உள்ளே சென்றான். "சீக்கிரம் மூடி விடு; ஜாக்கிரதை! அவர்கள் வந்தால் மூச்சு விடக்கூடாது" என்றான்.

"சரி கண்ணா!" என்று தயிர்ச்சட்டி சிரித்தான். பிள்ளைகள் வந்து விட்டார்கள். கண்ணனைத் தேடினார்கள்; காணவில்லை. தயிர்ச்சட்டியைப் பிடித்து உலுப்பி, "கண்ணன் எங்கே?" என்று கேட்டார்கள். தயிர்ச்சட்டி வாயைத் திறக்கவில்லை. பயனில்லை என்று கண்ட அவர்கள் கண்ணன் எங்கேயாவது ஓடி விட்டிருப்பான் என்று மேலே சென்றார்கள். அவர்கள் சென்றதும், தயிர்ச் சட்டி சாலினிடம் சென்றான். உள்ளிருந்த கண்ணன் "அவர்கள் போய்விட்டார்களா?" என்று கேட்டான்.

"ஓ! எல்லோரும் போய் விட்டார்கள்."

"சாலைத் திற; என் மேலே தூக்க முடியாத சாலை வைத்து மூடியிருக்கிறாய்?"

தயிர்ச்சட்டி சாலின் பக்கலில் மண்டி யிட்டான்! அவன் கண்களில் நீர் வழிந்தது!

"கண்ணா! அண்ட சராசரங்களை அணுவெனச் சுமக்கும் நீ தூக்கமுடியாத சால் என்னிடம் ஏது?" என்றான் விநயத்துடன்.

"தயிர்ச்சட்டி! என்ன பிதற்றுகிறாய்?"

"கண்ணா! நானா பிதற்றுகிறேன்? உன்னை அறியாதவர்களல்லவா பிதற்றுவார்கள்!"

"நீ ரொம்ப அறிந்துவிட்டாயோ?"

"பரந்தாமா! நான் அறிவிலிதான். ஆம் ஏழை! குருபி! இடக்கை வலக்கை வாசி யறியா இடைக்குலத்தில் பிறந்து, முடநாற்றத்தில் உழலுபவன். ஆமாம்! உதவியற்றவன் தான்......எனினும். ......எனினும், உன் அழகிய வாயால், அமுத மொழிகளால், பரிகசிக்கப்படும்பாக்கியம் பெற்றேன்! பரமஞானிகளும், பக்தர்களும் எதிர்பார்த்து நிற்கும் அப்பரிகாச மொழிகளால் அவர்களுக்கு அளிக்கும் பேற்றை எனக்கும் அளிப்பதாய் வாக்களித்தால் சாலைத திறக்கிறேன்!"

"இல்லாவிடில்?"

"நான் சாலைத் திறக்கப் போவதில்லை!"

"சாலை உடைத்துக்கொண்டு வெளி வருகிறேன்!"

"ஆஹா! உன்னால் முடியுமா? நானாவது உன்னைச் சால் கொண்டு பிணைத்தேன். கோபியர்களும், ஏனைய பக்தர்களும் நூல் கொண்டு பிணைத்தார்களே! அதையே உன்னால் அறுக்க முடியவில்லையே!"

கண்ணன் ஒரு விநாடி நேரம் பிரமித்துப் போனான்.

"ஏது! நீ பலே ஆளாய் இருக்கிறாயே!"

"எல்லாம் உன் படைப்பு! உன்னருள்! இதோ உன் உண்மை ரூபத்தை இச் சாலினுள் காண்கிறேன்! அருள் செய்யக் கூடாதா? கண்ணா!"

"சரி உன்னிஷ்டம் போல் செய்கிறேன். நீ கோரியதைக் கொடுத்து விட்டேன்! சாலைத் திற!"

சந்தோஷத்தினால் துள்ளிக் குதித்தான் தயிர்ச் சட்டி! சாலைத் திறந்தான். கண்ணன் புன்னகையோடு வெளியேறினான். அக்கோலப் புன்னகை "பேஷ் தயிர்ச்சட்டீ, நீபெரிய ஆள்!" என்றது.

அதற்கு அவன் "உன்னடிமை" என்று கூவினான். கண்ணன் ஓடி விட்டான். ஆனால், தயிர்ச்சட்டியோ அவன் ஓடிய திக்கையே நோக்கிப் பிரமை கொண்டவன் போல் கண்களில் நீர் பெருக நின்று விட்டான். சிறிது நேரம் சென்றது. பூமியை நோக்கினான். அத் தீராத விளையாட்டுப் பிள்ளையின் சிறிய கால் சுவடுகளைக் கண்டான். அவன் காலடிபட்ட அம் மண்ணை யெடுத்து முத்தமிட்டான். உடலில் பூசிக்கொண்டுகுலுங்கக் குலுங்கக் குதித்தான்.

ததிபாண்டகன்பெற்ற பேறுதான்என்னே! ✳

காலணா

வை. சுப்ரமண்யன்

மவுண்ட்ரோடில் இறங்கி, எதோ காரியத்தைப் பார்த்துக்கொண்டு போக வேண்டும் என்று சாயந்திரமே தீர்மானித்துக் கொண்டான் ராமச் சந்திரன். அவன் உத்தியோகம் பார்க்கும் காரியாலயம் டவுனில் உள்ளது. தினசரி மயி லாப்பூரிலிருந்து டவுனுக்கு டிராம் வண்டியில் தான் போய் வருவான். அநேகமாக ஒவ்வொரு மாதத் துடக்கத்திலும் டிராம் வண்டியில் போய் வருவதற்காக டிராம் பாஸ் வாங்கி வைத்துக் கொண்டு விடுவது வழக்கம். எழைக் குமாஸ்தா அவன்; காசை வீசி யெறிந்து தினமும் பஸ்ஸில் போய் வருவ தென்பதோ, அன்றாடம் டிராம் செலவுக்குக் காசைக் கையில் கொண்டு போவ தென்பதோ முடியாது.

முதல் தேதி பிறந்தவுடன் நூற்றிருபது ரூபாய் கொண்டு வருவான் ராமச்சந்திரன்; இரண்டாம் தேதியன்று அவ்வளவு பணமும் எங்கே போயிற் றென்று புருஷனை மனைவியும், மனைவியைப் புருஷனும் மானஸீகமாகப் பரஸ் பரம் கேட்டுக் கொள்ளும் நிலைமைதான்! பணக்கார நிலையை அபேட்சித்து ஒவ்வொரு நாளையும் பல்லைக் கடித்துக்கொண்டு தள்ளி வந்தான்.

அபூர்வமாக அவன் அபேட்சிக்கும் அந்தப் 'பணக்கார நிலை' கூட ஒரோரு சமயம் வந்து விடும் ராமச்சந்திரனுக்கு! சட்டைப் பையில் பணம் உறுமினால், அவனுக்குத் தலைகாலே தெரியாது! முகத்திலே எற்படும் களைக்கு ஈடு இணை கிடையாது.

* * *

அன்று மவுண்ட்ரோடில் காரியம் முடிந்து டிராம் நிற்கு மிடத்தில் வந்து நின்றுகொண் டிருந்தபோது, ராமச்சந்திரனின் முகத்தில் அந்தக் களை இல்லை! பகல் முழுதும் காரி யாலயத்தில் வேலை செய்திருக்கிறான்; அன்று மத்தியான்னம் பலமான டிபன்கூடக் கிடையாது. ஆறு மணிக்கே அகோரமாக ஆரம்பித்த பசி அவனைத் துரத்தித் துரத்தி வீடு நோக்கச் செய்தது. பசியையும் பொறுத்துக் கொண்டு போகும் வழியில் இறங்கி, காரியத்தைப் பார்த் துக் கொண்டான். அதுவும் அவனுடைய நினை வில் பத்துநாட்களாய் ஊறிக் கிடந்து, அன்றுதான் சித்தி யடைந்தது. மவுண்ட்ரோடைத் தாண்டும் போதெல்லாம், "நாளைக்காவது மவுண்ட்ரோடில் இறங்க வேண்டும்" என்று நினைத் திருந்து விட்டு இன்று நிஜமாகவே இறங்கி விட்டான்.

வண்டிக்காகக் காத்திருந்தபோது ராமச்சந் திரன் காற்றுடன் கலந்த ஒரு பொருள் போலக் கனமற்று இருந்தான். வேலையின் அசதியும், வயிற்றுப் பசியும், எதிலும் பதிய மறுத்த மனசும் அவனை அப்படி ஆக்கி விட்டிருந்தன. வாய் வறண்டிருந்தது. அவன் மனம், குளிர்ந்த பானங்களில் மிகவும் நேர்த்தியானதும் விலை அதிகமானதாகவும் உள்ள பல வகை களையும் எண்ணிப் பார்த்தது. அப்போதே நெஞ்சு நனைந்த மாதிரி இருந்தது. ஆனால், எட்டில் எழுதிப் பார்த்து விட்டால் சர்க்கரை திதித்து விடுமா? நெஞ்சில் குளிர்ச்சி மூட்டிய பானம் நாக்கில் ஜலத்தையும் ஊற வைத்து விட்டது.

சட்டைப் பையில் கையை விட்டுத் துழாவினான். வெடுக்கென்று கை வெளியே வந்தது. அவன் கால்கள் வேகமாக விளக்கடிக்கு நகர்ந்தன. கையில் தேள் கடித்து விடவில்லை!

கையைப் பிரித்துப் பார்த்தான்; உள்ளங்கை மத்திக்கு அந்தப் பொருளைப் புரட்டி விட்டுக் கொண்டு கண்களால் நோக்கினான். ஓரணா நாணயம் விளக்கொளி பட்டுப் பளிச்சிட்டு, அவ னைப் பார்த்துச் சிரித்தது.

இடது கையை அடுத்த கணம் சட்டைப் பையி னுள் விட்டுத் துழாவினான்; கையில் கொஞ்சம் சிவல் துகள்களும் மண்ணும் கலந்து வந்திருந் தன; அவை தவிர ஒன்றுமில்லை. அவன் கண்கள் அகல விரிந்தன. மண்ணை ஊதி விட்டு, கற்பனைப் பானத்தினால் இன்னும் சிறிது ஜலம் விட்ட நாக்கின்மீது அந்தச் சிவல் துகள் களை வைத்துக் கொண்டு ருசித்தான். மறு படியும் கையை விட்டுத் துழாவி வெளியே எடுத்த போது வெறுங்கை வந்திருப்பதைக் கண்டான்; தையல் பிரிந்து கொடுக்கும் அளவுக் குக் கை விரல்கள் சட்டைப் பைக்குள் அலசின.

திரை அழகு

1950—ம் வருஷம் சினிமா உலகைப் பொறுத்தவரை மிகவும் வெற்றி யளிக்கக் கூடிய வருஷமா யிருக்கக்கூடும் என்று சூசனையாகத் தெரிகிறது. மாடர்ன் தியேட்டர்ஸாரின் **'பொன்முடி'** தமிழ்ப் படம் இந்த விஷயத்தை உண்மை யென்று சாதிக்கும் வகையில் மிகமிக நன்ருக அமைந்துள்ளது. புதுவருஷத்தில் வெளியாகும் படங்களில் மிகச் சிறந்த படங்கள் சில உள்ளன; அவைகளுள் **'பொன்முடி'**யும் ஒன்று என்று தீர்க்கமாகக் கூறலாம்.

பட உலகில் ஒரு சில ஸ்தாபனங்கள் தாம் பொது மக்களின் ரசனைக் கேற்ற முறையில் கதைகளைத் தேர்ந் தெடுத்து, அதற் கேற்ப நடிகர்கள் டைரக்டர், டெக்னீஷியன்கள் முதலியவர்களை ஒப்பந்தம் செய்து, படத்தையும் சிரத்தையுடன் எடுத்து முடித்து வெளிக் கொணர்கிருர்கள். அவர்கள் எடுத்துக் கொள்ளும் சிரத்தைக்குப் பிரதிபலனுகப் படம் பொதுமக்களின் அபிமானத்தை எளிதில் கவர்ந்துவிடுவதுடன் பணவருவாய்க்கு வழி செய்யும் ஒரு சிறந்த படம் என்றும் பெயர்பெறுகிறது.

மாடர்ன் தியேட்டர்ஸார் இத்தகைய சிறந்த படங்களையே பெரும்பாலும் தயாரிக்கிருர்கள் என்பது சொல்லாமலே விளங் கும். அதற்குக் காரணம் அவர்களிடமுள்ள பலவகையான வசதிகளே. முதன் முதலாகக் குறிப்பிடக்கூடிய ஸ்டுடியோ வசதியும், அடுத்ததாகச் சொல்லக்கூடிய டெக்னீஷியன்களின் வசதியும் அவர்களிடம் அபரிதமாக உண்டு. படத்தின் வெற் றிக்கு ஆதாரமான கதையை மிகச் சிறந்த முறையில் தேர்ந் தெடுத்துவிடுகிருர்கள் அவர்கள். படத்தின் வெற்றிக்குக் கார ணங்கள் இவைகள் தாம்!

'பொன்முடி'யும் ஒரு வெற்றிகரமான படம்; ஜன ரஞ்சக மான படம்; பார்த்தபின் மறந்து விடாமல் நீணைவு கூரத்தக்க சிறந்த படம்; இன்னும் சொல்லப்போனல், பட நுணுக்கங்கள் பலவற்றையும் ஒருங்கே ரசிகர்களுக்கும் படத் தயாரிப்பாளர் களுக்கும் தெளிவுற உணர்த்தும் படம் என்றே சொல்லி விடலாம். டைரக்டர் எல்லிஸ் ஆர். டங்கனின் திறமையும், மாடர்ன் தியேட்டர்ஸாரின் பலவகை இலாகாவைச் சேர்ந்த கலை ஞர்களின் ஒத்துழைப்பும், நரசிம்ம பாரதி, மாதுரிதேவி முதலிய நடிகர்களின் சோபிதமான நடிப்பும் படத்தின் வெற்றிக்கு அடிப்படையான காரணங்கள்.

பொன்முடி

கதை : 'பாரதிதாசன்'

டைரக்ஷன் :
எல்லிஸ் ஆர். டங்கன்

நடிகர்கள் :
நரசிம்ம பாரதி, ஆர். பாலசுப்ரமணியம், காளிரதனம், ஆழ்வார் குப்புசாமி, பெருமாள், மாதுரிதேவி, சரஸ்வதி, தனலட்சுமி.

நடனம்:
லலிதா - பத்மினி

தயாரிப்பு:
மாடர்ன் தியேட்டர்ஸ், சேலம்.

கதை—முதல் தரம்

வாணிபத் துறையில் தமிழ்நாடு வளம்பெற்றுத் திகழ்ந்த பழங்காலத்தில் காவிரிப்பூம்பட்டினத்தில் மானநாயக்கன், சொக்கலிங்க நாயக்கன் என்ற இரு பிரசித்திபெற்ற வணிகர்கள்

இருந்தனர். அவர்களின் குழந்தைகளானபொன்முடியும், பூங்கோதையும் இளம் வயது முதலே ஒன்றாகப்பழகி, காலப்போக்கில் கனிவுற்ற காதலர்களாகின்றனர். பெரியோர்களுக்குள் குமைந்த பழைய குடும்பப் பகை காரணமாக இவர்களின் காதலுக்குக் குந்தகம் எற்படுகிறது. பூங்கோதையின் தந்தை பொன்முடியை அடித்துத் துன்புறுத்தி அவமானப்படுத்துகிறான். பொன்முடி வியாபார நிமித்தம் தந்திரமாக வடநாட்டுக்கு அனுப்பப்படுகிறான் அவனைத் தேடிக்கொண்டு பூங்கோதையும் வீட்டோருக்குத் தெரியாமல் வடநாட்டுக்குக் கிளம்பி விடுகிறாள். வழியில் கபாலிகர்களால் துன்புறுத்தப்பட்ட பொன்முடி நரபலிக்குக் காளிகோயிலில் நிறுத்தப்படுகிறான். பொன்முடியைக் கபாலிகர்கள் மறித்துத் தம்முடன் அழைத்துச் சென்றுவிட்ட செய்தியை யறிந்த அவன் கூட்டத்தினரில் ஒருவன் தான் தப்பிச் சென்றமார்க்கத்தில் பூங்கோதையின் கோஷ்டியினரைக் கண்டு அவர்களிடம் பொன்முடியைக் காப்பாற்றும்படி முறையிட்டு அவர்களை அழைக்கிறான். தக்க தருணத்தில் பூங்கோதையும் மற்றோரும் சென்று கபாலிகர்களை விரட்டி, சாகுந்தறுவாயிலிருந்த பொன்முடியைக் காப்பாற்றுகின்றனர். முடிவில் காதலர்கள் தம் லட்சிய சித்தியைப் பெறுகின்றனர். இதுதான் கதை.

கவிஞர் 'பாரதி தாசன்' கதையில் அழகான கருத்தைக்கூட்டி அமைத்திருப்பதைப் பாராட்டும் போதே, கதையின் கருத்துச் சிதையாமல் படம் வளர்ந்திருப்பதையும் மற்றொருபுறம் பாராட்ட வேண்டியிருக்கிறது.

தமிழ்நாட்டின் இயல் இன்னதென்பதை நிதரிசனமாக உணர்த்துகிறது கதை. காதல் என்ற லட்சியம் காப்பாற்றப்படுவதைக் கதை முழுவதிலும் புகுத்தி, லட்சியம் கடைசியில் வெற்றிபெறுவதையும் காட்டியிருக்கிறார் ஆசிரியர். தமிழர் பண்பாட்டைக் காதல் திருமணத்தின்மூலம் ஆதாரபூர்வமாகச் சித்திரித்திருக்கிறார். தமிழ்நாடும், தமிழரும் வேறுபாடற்றமுறையில் இத்தகைய சிறந்த பண்பாடுகளைப் பெற்று வந்தால் இயல்பான பழைய நாகரிகத்தைப் பெற்று பழம் மக்களாகி விடுவோம். இந்தச் சகாப்தத்தின் புதுமை நாகரிகத்தைவிட அத்தகைய பழைமை நாகரிகமே மேன்மையானது என்று பொன்முடி படத்தைப் பார்த்துவிட்டுத் திடமாகச் சொல்லலாம்.

வசனம் மிகவும் உயர்தரமாக அமைந்துள்ளது. பொன்முடியும் பூங்கோதையும் சந்தித்துக் காதல் வசமாகிக் கனிந்து சம்பாஷிக்கும் கட்டங்களில் வசனம் ஜீவன் ததும்ப விளங்குகிறது. பொன்முடியைத் தேடி வடநாடு செல்லும் அவனுடைய காதலி பூங்கோதை, வழியில் தம் சகாக்களிடையே ஒரு சொற்பொழிவாற்றி அவர்களை உற்சாகப்படுத்துகிறாள். இந்த இடத்திலும் வசனம் அமைந்துள்ள முறை பிரமாதமாக உள்ளது.

டைரக்ஷன்—பிரமாதம்

எந்தப் படமாயினும் சரி, 'எல்லிஸ் ஆர். டங்கன்-டைரக்ஷன்' என்றால், ஒருகால் அப்படத்தில் மற்ற அம்சங்களில் குற்றங் குறைகள் காணப்படினும், டங்கனின் டைரக்ஷன் திறன் அவைகளை மூழ்கடித்து, 'படம் நன்றாயிருக்கிறது!' என்று சொல்லுமளவுக்கு ஆக்கிவிடும். பழுத்த அநுபவம் வாய்ந்த அவர் ஒவ்வொரு படத்திலும் ஒரு நுணுக்க அம்சத்தைத் தெளிவுபடுத்திக் காண்பிப்பார்.

'பொன்முடி'யில் அவருடைய டைரக்ஷன் திறமையையும், டங்கன் ஒருசிறந்த காமிரா மேன் என்ற உண்மையையும் தெள்ளத் தெளியக் காண்கிறோம். படம் முழுவதும் விறுவிறுப்பு (Tempo) நிலைத்திருக்கவேண்டும் என்ற கருத்தோடு அவர் படத்தின் எடுத்த எடுப்பிலேயே ஒரு அபூர்வமான காட்சியை இணைத்திருக்கிறார். அதிகாலை வேளையில் கடலில் முத்துக் குளிக்கும் காட்சியையும், அதன் பின்னணி இசையாய் ஒலிக்கும் **'தேசமெங்கும் நல்வளம் சூழ'** என்ற இனிமையான பாட்டையும் நிரம்பிய மனத்துடன் அநுபவிக்க ஆரம்பிக்கும் பொதுஜனங்கள், பிறகு இறுதி வரையில் படத்திலேயே லயித்துவிடுவர். பொன்முடியும் பூங்கோதையும் உள்ளிட்ட சில சிறுவர்கள் சேர்ந்து விளையாடிக்கொண்டிருக்

கின்றனர். விளையாட்டிடையே சிறுவன் பொன்முடியும் சிறுமி பூங்கோதையும் ஒருவரையொருவர் முறையே கணவனும் மனைவியுமாக வரித்துக்கொண்டுவிடுகின்றனர். பொன்முடி ஒரு கல்லை ஒரு கயிற்றில் கட்டி, அதைப் பூங்கோதையின் கழுத்தில் தாலியாகப் பாவித்துக் கட்டிவிடுவதும், சில பையன்கள் இவ்வைபவத்தைப் பறை சாற்றும் வகையில் மேளம் வாசிப்பதும் மிகவும் இயற்கையாகவும் கருத்தைக் கிளறுவனவாயும் இருக்கின்றன.

டங்கனின் திறமை இன்னொரு இடத்தில் சிகரம் போன்று பிரகாசிக்கிறது. காதலர்களான பொன்முடியும் பூங்கோதையும் சந்திக்கும் கட்டம்; அவர்கள் சம்பாஷித்துக்கொண்டிருக்கின்றனர். சம்பாஷணையின் ருசியிலும் காதல் நிலையிலும் அவர்கள் தம்மை மறந்து இனம் தெரியாத ஒரு ஆழ்ந்த நிலைக்குச் சென்றுவிடுகின்றனர். இந்தக் காட்சியைச் சிறந்த யோசனையுடன் சித்திரித்திருக்கிறார் டைரக்டர். காமிராவைக் கையாள்வதுதான் இந்தக் காட்சியைச் சித்திரிப்பதற்குத் தகுதியான முறை என்றறிந்து அற்புதமான 'ட்ராலிஷாட்டை' உயர்ந்த பாகத்திலிருந்து எடுக்கச் செய்துள்ளார் டங்கன். திரையில் 'குளோஸ்–அப்'பில் தெரியும் பாத்திரங்களைப் போகப்போகச் சிறிதாக்கிக் கடைசியில் அவர்களை ஒரு சிறிய புள்ளிபோல் காண்பிப்பதன் மூலம் அவர்கள் நிலையை உணர்த்துகிறார். படத்தில் இந்த இடம் ஒரு விசேஷமான அம்சம்; எல்லோரும் ஊன்றிக்கவனிக்கவேண்டியதாகும்.

நடிப்பு—குறைகள் இல்லை

பொன்முடியாக நடிக்கும் நரசிம்ம பாரதி முதல் படத்திலேயே வெகு நன்றாக நடித்துள்ளார். நடிப்பும், அவரின் தோற்றமும், அவரைப் பட உலகில் நன்றாக ஈடுபடுத்திச் செல்லும் என்று திடமாகச் சொல்லலாம். மாதுரி தேவிதான் இப்படத்தில் நடிப்பு — தோற்றம் இரண்டிற்குமே முதல் ஸ்தானத்துக்குரியவராகிறார். கதாநாயகியின் பாத்திரத்தை அநாயாசமாக ஏற்று நடிக்கும் இவருக்கு இனி வரப் போகும் படங்களில் பிரதம பாகங்களே அளிக்கப்படவேண்டும். காமிராவின் பல கோணங்களுக்கும் மாதுரிதேவியின் தோற்றம் மிகப் பொருத்தமாயுள்ளது, ரசிகர்களுக்கேற்ற கச்சிதமான நடிப்பு அவரிடம் காணப்படுகிறது. பொன்முடியைப் பிரிந்து, பிரிவாற்றுமையால் தவிக்கும் இவரின் நடிப்பு படத்தில் உச்சமாக அமைந்துள்ளது.

ஆர். பாலசுப்பிரமணியமும் பெருமாளும் தமது பாத்திரங்களுக் கேற்பகச்சிதமாக நடித்துள்ளனர். இதுகாறும்படங்களில் ஹாஸ்யபாகம் ஏற்று நடித்துவந்த ஆழ்வார் குப்புசாமி இப்படத்தில் ஒரு குணவிசேஷ பாத்திரம் தாங்கித் திறம்பட நடித்துள்ளார்.

மற்ற அம்சங்கள்—திருப்திகரம்

லலிதா - பத்மினி சகோதரியரின் மதுரை வீரன் நடனம் படத்தில் இணைக்கப்பட்டுள்ளது. நடனத் தோற்றங்களில் சோடை போகாத இச் சகோதரியர் இப்படத்திலும் தம் பெயரை நன்கு நிலை நாட்டிக்கொண்டுள்ளனர்.

படத்தில் ஒளிப்பதிவும், ஒலிப்பதிவும் திருப்திகரமாக இருக்கின்றன. நரசிம்ம பாரதிக்கும் மாதுரிதேவிக்கும் முறையே குரல்கள் அளித்துள்ள ஜி. ராமநாதனும், டி. வி. ரத்னமும் நன்றாகப் பாடுகின்றனர். படத்தில் குரல் வேறுபாடு தெரியாத முறையில் தத்ரூபமாக ஒலியைப் பதிவு செய்துள்ளனர்.

ஆரம்பத்தில் கூறியபடி மாடர்ன் தியேட்டர்ஸாருக்குள்ள ஸ்டூடியோ வசதிகளுக் கிணங்க சில அற்புதக் காட்சிகள் படத்தில் காணப்படுகின்றன. கபாலிகர்களின் காளிகோயில் அமைந்துள்ள இடத்தைக் குறிப்பிட்டுக் காண்பிக்க அத்தகைய சூழ்நிலை ஒன்றை அபாரமான 'லாங் ஷாட்' மூலம் காட்டியுள்ளனர். இந்தக் காட்சிக்கும் மாட்டுவண்டிப் பிரயாணக்காட்சிகள் முதலியவற்றிற்கும் சேர்வராய மலைப்பகுதிகள் பிரமாதமான முறைகளில் பயன்படுத்திக்கொள்ளப்பட்டிருக்கின்றன.

மொத்தத்தில் கதை அம்சம், டைரக்ஷன், நடிப்பு, பட நுணுக்கங்கள் முதலிய எல்லாவற்றிலும் ஒருங்கே வெற்றி பெற்ற படம் **'பொன்முடி'** என்பதில் ஐயமில்லை.

அன்பிற்கு அர்ச்சிக்க மரணம்

டொரின்ராய்

திருபுரம் இன்னும் ஜீவித்திருக்கப் போவது சில நாட்களுக்குத் தான். அவள் படுத்திருந்த அறை, அவ்வீடு, மற்ற சூழ்நிலைகள் ஆகிய எல்லா விடங்களிலும் நிசப்தமும் சாந்தியும் பொலிந்து விளங்கின. திருபுரத்தின் தெள்ளிய முகம் புன்னகையுடன் உண்மை மனச் சாந்தியையும், ஒரு தாயின் தூய மன நிலையையும் பெற்று விளங்கியது. அன்றியும் அப் புன்னகை அவள் கலக்க மின்றி மரணத்தை வரவேற்பவள் என்பதைக் காட்டியது. மலர்ந்து விழித்திருந்த அவள் கண்கள் பல மைல்களுக் கப்பால் எதையோ கூர்ந்து கவனிப்பன போல் தோன்றின

கீழே சமையலறையில் துலக்கப்படும் பாத்திரங்களின் சப்தம் பல மணிகளின் ஒலிகளென அவ் வீட்டின் நிசப்தத்தைக் கலக்கியது. திருபுரத்தின் ஒரே தங்கை சௌந்தரம் அவள் கால விதியால் கைம்பெண்ணாகி, அன்று முதல் திருபுரத்தின் வீட்டிலேயே வளர்ந்து வந்தாள். திருபுரத்தின் மண வாழ்க்கை, மகப் பேறு எல்லாவற்றிலும் காணும் சுக துக்கங்களில் அவளும் பங்கெடுத்து, அக்குடும்பத்தில் ஒருத்தியாக இருந்து வந்தாள்.

நான்கு வருஷங்களுக்கு முன் திருபுரத்தின் கணவன் இறந்தது அவளையும் பெருந்துக்கத்தில் ஆழ்த்தியது. சென்ற ஒரு வருஷமாய்த் திருபுரம் தீரா நோய் வாய்ப்பட்டுவிடவே, குடும்பத்தில் எல்லாப் பொறுப்புகளும் அவள் தங்கை சௌந்தரத்தின் மேல் விழுந்தன. திருபுரத்தின் முதல் மகன் மாதவன் டெல்லியில் 'பாரெஸ்ட் காலேஜ்'ஜில் படித்து வந்தான். பதினெட்டு வயதான இரண்டாவது மகன் ராமுவும் பதினான்கு வயதுள்ள அவள் தங்கை மைதிலியும் திருபுரம் படுத்திருந்த அறைக்குப் பக்கத்து அறையில் மெதுவாகப் பேசிக் கொண் டிருந்தார்கள் :

நேயர்களுக்கு எமது மனமார்ந்த

பொங்கல் வாழ்த்துக்கள்

✲

இவ்வருடத்தின்
இணையில்லாச் சித்திரம்

பொன்முடி

மற்றும்

மாயக் குதிரை

போஜன்

பாலராஜு

(தெலுங்கு)

கொல்லபாமா

(தெலுங்கு)

சோனு சண்டி

(ஹிந்தி)

அரேபியன் நைட்ஸ்

(ஹிந்தி)

✲

டிஸ்ட்ரிபியூட்டர்ஸ்:

வட ஆர்காடு, தென் ஆர்காடு, செங்கல்பட்டு, சித்தூர் ஜில்லாக்களுக்கு

பயனீர் பிக்சர்ஸ் லிமிடெட்,

குடியாத்தம்

PARVATI

Edited and Published by V. Namasivayam at Bharat Studio, Mount Road, Madras and Printed by P. Radhakrishna Chettiar, at The Royal Printing Works, 11-A, Mount Road, Madras-2.
Associate Editor: Vai. Subramanyan.

"ராமு! வேண்டாம்; மாதவ அண்ணாவுக்கு இப்பொழுது தந்தி யடிக்க வேண்டாம். இப்போது அவனுக்குப் பரீட்சை சமயமென்றும், அவனுக்கு ஒன்றும் தெரிவிக்க வேண்டாம் என்றும் அம்மாவே சொன்னாள்."

"மைதிலி, இந்த விஷயங்களில் உனக்கு ஒன்றும் தெரியாது. இன்று காலையில் டாக்டர் மாமா என்னிடம் இன்னும் அம்மா உயிருடன் இருக்கப் போவது பத்து நாட்கள் தான் என்று சொல்லி விட்டார். மாதவனிடம் அம்மா வைத்திருக்கும் ஆசை எல்லை யற்றது. இறக்குமுன் அவனை அவள் ஒரு தரமாவது பார்க்கும்படிச் செய்யாவிடில் அவள் ஆத்மா சாந்தி யடையாது."

மைதிலிக்கு ஒன்றும் புரியவில்லை. ஆம்; மரணத்தைப் பற்றிப் பேச அவளுக்கென்ன வயதாகி விட்டது? ஆனால், துக்கம் மட்டும் தொண்டையை அடைத்தது.

"அண்ணா! எனக்கு ஒன்றும் தெரியவில்லை! அம்மாவே வேண்டாம் என்று சொல்லி யிருக்கும் பொழுது, நாம் அப்படிச் செய்யலாமா?" என்று கேட்டாள்.

"மைதிலி, நீ சொல்கிறாய்; நாளைக்கு மாதவன், தான் அம்மாவை உயிருடன் ஒரு முறை பார்க்கவில்லையென்று நம் மீதுதான் குறை சொல்வான்; நம்மை வெறுக்கவும் வெறுப்பான்!"

ராமு இதைச் சொன்னதும் மைதிலிக்கு மனம் கொதித்தது. தன் அம்மா இறந்து விடுவது நிச்சயம் என்று கேட்ட அவள் மனம் பொங்கியது. விம்மி விம்மி அழ ஆரம்பித்து விட்டாள். ராமுவும் அவள் நிலைமையையுணர்ந்து, அந்தப் பேச்சைவிட்டு அவளைத் தேற்றினான்.

"அழாதே மைதிலி; சற்று வெளியில் போய் வரலாம், வா அம்மாவும் தூங்குகிறாள். சின்னம்மாவிடம் சொல்லி விட்டு வா" என்றான்.

மைதிலி சமையலறையை நோக்கி மெதுவாய் ஓடினாள். அங்கே சின்னம்மா மும்முரமாகச் சில தின்பண்டங்கள் செய்து கொண்டிருப்பதைக் கண்டாள். கலங்கிய கண்களுடனும், வருத்தம் நிறைந்த மனத்துடனும் தன் வேலையில் கவனமாயிருந்த சௌந்தரத்தைக் கண்ட மைதிலியின் மனம் கரைந்தது. 'பாவம்! நான் பிறப்பதற்கு முன்னமே இந்தக் குடும்பப் பொறுப்புகளை ஏற்று, சதா உழைக்கும் சின்னம்மா எவ்வளவு நல்லவள்! அவள் ஒரு பலனையும் கண்டறியாள்!' என்று தனக்குள் சொல்லிக்கொண்டாள். அவள் பலகாரம் செய்வதைப் பார்த்து ஆச்சரியம் கொண்டு, "சின்னம்மா, ஏன் இந்தப் பலகாரங்களெல்லாம் செய்கிறாய்?" என்று கேட்டாள்.

குழந்தைக்குக் காட்டக் கூடாது என்று தன் துக்கத்தை ஒருவாறு மறைத்துக்கொண்டு, "வாம்மா, மைதிலி. அம்மாவுக்கு உடம்பு சரியில்லையல்லவா? அவளுக்கு மனத்தில் பல பல எண்ணங்கள் தோன்றுகின்றன. சற்று முன்பு நான் அவளுக்குத் தூக்க மருந்து கொடுத்து வந்தேன் அப்பொழுது, பாவம். அவள் 'மாதவன் இன்று இரவு சாப்பிட வந்துவிடுவான்; அவனுக்குப் பிடித்த சமையலும், கொஞ்சம் கைமுறுக்கும், அதிரசமும் செய்' என்று சொன்னாள்" என்று கூறினாள் சௌந்தரம்.

மைதிலி உடனே 'பளிச்'சென்று கூறினாள்:

"சின்னம்மா! இது என்ன பைத்தியம்? அம்மா மனசு தான் ஒரு நிலையில் இல்லையே! அவள் பேச்சை நம்பி, 'நீ ஏன் இப்படிச் சிரமப் படுகிறாய்?"

"அப்படியில்லை, மைதிலி! இறக்கும் தறுவாயிலிருக்கும் அவளுக்கு ஒரு குறையும் கூடாது. அவள் இஷ்டப்படி செய்வோம். இன்னும்..." என்று சௌந்தரம் சொல்லும் பொழுதே மைதிலி அழ ஆரம்பித்து விட்டாள்.

"அழாதே மைதிலி; ராமுவுடன் சற்று வெளியில் போய் உலாவி வா. சீக்கிரம் சாப்பிட வந்துவிடு. அம்மா விழித்துக் கொண்டதும் உன்னைக் கூப்பிடுவாள்......போ!" என்று அவளை வெளியே அனுப்பினாள். தங்கள் ஏக்கத்தை மறக்க

ராமுவும் மைதிலியும் வெளியே சென்றார்கள். குழந்தைப பிராயம் முதல் அவர்கள் அத்தெருக் கோடியிலுள்ள பார்க்குக்குத் தினம் செல்வது வழக்கம். அவர்களை யறியாமல் இன்றும் அங்குதான் சென்றார்கள். குழந்தைமுதல் அவர்களுக்கு இன்பம் காட்டிவந்த அந்தப் பார்க் அன்று ஒரு சோகக் காற்றையே வீசியது. அங்கிருந்த ரேடியோவும் சோகமாக அப்பொழுது "வைஷ்ணவஜனதோ" பாடியது.

அவர்கள் ஒருங்கே அம்மாவையும், பல மைல்களுக் கப்பால் டில்லியில் படித்து வரும் அண்ணன் மாதவனையும் நினைத்தார்கள். முன்பெல்லாம் இவர்கள் மாலையில் விளையாடவரும் பொழுது மாதவன்மட்டும் வீட்டிலேயே இருந்து விடுவான். எப்பொழுதும் அம்மாவுக்கு உதவி செய்து கொண்டு அவள் பக்கத்தி லிருப்பதையே அவன் விரும்புவான். அம்மாவும் அவனைவிட்டு ஒருமணி நேரம் கூடப் பிரிய இஷ்டப்படமாட்டாள். இதை யெல்லாம் நினைத்து, அவர்கள் வருந்தினர். அன்றியும், தாங்கள் எப்பொழுதும் உட்காரும் கல்லாசனம், விளையாடும் புல்தரை, அவர்கள் சுற்றிச் சுற்றிவரும் பாகுமரம் எல்லாம் அன்று அவர்கள் மனத்தில் சோகத்தையே தூண்டின. இருவரும் ஒன்றும் பேசாமல் மௌனமாகப் பார்க்கில் ஒரு மூலையில் உட்கார்ந்தார்கள்.

மைதிலி தன் கண்களைத் துடைத்துக்கொண்டு திடீரென நினைவுக்கு வந்தாற்போலக் கூறினாள்:

"ஆம், அண்ணா; நீ சொல்வதும் சரிதான். மாதவனுக்குத் தெரிவிக்காம லிருக்கக் கூடாதுதான். அம்மாவின் மனமும் நிலையும் நாளுக்குநாள் மோசமாகிக் கொண்டே வருகின்றன. இன்று அவள் சின்னம்மாவிடம் இரவு மாதவன் சாப்பிட வரப் போவதாகவும், அவனுக்குப் பிடித்தமான சமையலோடு கொஞ்சம் கைமுறுக்கும், அதிரசமும் செய்ய வேண்டும் என்றும் சொன்னாளாம். பாவம் வெளுத்த தெல்லாம் பால் எனும் சின்னம்மாவும் அதுவும் உண்மைதானென்று சிரமத்தைப் பார்க்காமல் அப்படியே செய்கிறாள். கேட்டால், 'அம்மா மனம் கோணாமல் செய்யவேண்டு'மென்கிறாள்."

"பார்த்தாயா, மைதிலி! நாளைக்கு எப்படியும் தந்தி யடித்து விடுவோம்!" என்றான் ராமு.

இப்படிச் சிறிது நேரம் பேசிய பிறகு மைதிலி, "அண்ணா! அம்மா நிச்சயம் பிரிந்து விடுவாளா? அப்புறம்—யார்—அவள் நம்மைவிட்டு எங்குச் செல்கிறாள்?" என்று கேட்டாள். அவள் பயந்திருப்பதைக் கண்ட ராமு "பயப்படாதே, மரணம் என்பது எல்லோருக்கும் வருவது இயற்கைதான். எத்தனையோ பேர் இறந்துவிட்டிருக்கிறார்கள். நம் அப்பா பெரியப்பா........" என்று ஏதேதோ சொல்லிவந்த ராமுவின் மனத்திலும் திகில் உண்டாகி விட்டது. எழுந்து மணியைப் பார்த்தான்.

"மைதிலி, மணி ஒன்பது அடித்துவிட்டதே; வா—வா—போவோம்; நேரமாய்விட்டது. சின்னம்மா பார்த்துக்கொண்டிருப்பாள். அம்மா விழித்துக் கொண்டிருந்தாலும் இருப்பாள்" என்று பரபரப்புடன் கூறினான். உடனே இருவரும் புறப்பட்டார்கள். அதிக வெளிச்சமின்றி நிசப்தமாயிருக்கும் வீட்டை யடைந்து, நேராகத் திருபுரத்தினிடம் சென்றார்கள். மெதுவாக ராமு கதவைத் திறந்தான்.

"மைதிலி! அம்மா விழித்துக் கொண்டிருக்கிறாள். மெதுவாக வா—" என்று அவளிடம் மெல்லச் சொல்லி உள்ளே சென்றான். அவளும் உள்ளே சென்றாள்.

படுக்கையிலிருந்த திருபுரம் அவர்களைக் கண்டாள். அவள் உதடு புன்னகை காட்டியது. பொங்கி எழும் தாயின் உள்ளம் அவள் கண்களில் ஒளி வீசியது. ராமுவும், மைதிலியும் படுக்கையின் இருபக்கங்களிலும் பயத்துடன் வந்து நின்றார்கள்.

"கண்மணிகளே! வாருங்கள்; கிட்ட வாருங்கள்; பயப்படாதீர்கள்!"

*

கதை என்ன?

படக் கதைப் போட்டி

பரிசு ரூ. 15

*

கார்போன்று வாழி

'புன்னகை'

1. தென்றல்தவழ் குமரிமுனை பாதம்வைத்துத்
 தேன்னிகர்க்கும் அழகுதமிழ் தொகுத்தளித்து
நின்றுதிகழ் பனிப்படலம் நிறங்கள் வீச
 நீண்டுயர்ந்த இமயமலை முடியாய்ச்சூடி
வென்றுதிகழ் நற்கலைகள் வகுத்துநாட்டி
 வேண்டுமட்டும் சுவைப்பீரென வாழ்த்தும் அன்னை
இன்றுதிகழ் கன்னியென எந்நாளும்
 இயலிசையும் நாடகமும் காத்துவாழி.

2. தமிழர்களின் தனிநோன்பாம் பொங்கலன்று
 தானியங்கள் முதிர்ந்தசீர் கதிர்கள்நாட்டி
சிமிழ்ஒத்த புதுப்பானை சிறப்பாய்வைத்துச்
 சித்திரங்கள் இட்டழகு செய்தவீட்டில்
மகிழ்வூட்டும் பாற்பொங்கல் பொங்கவேண்டி
 மானிலத்தை ஈன்றளித்த 'பார்வதி' யை
இதழ்விரித்து இன்பூட்ட வருகவென்று
 எழில்பூத்து யாங்களுனை வரவேற்கின்றோம்.

3. சொல்லுக்கு உயர்வுதமிழ்ச் சொல்லேயென்றும்
 சித்திரங்கள் நாட்டுதற்கும் நாமேயென்றும்
நல்லொத்து உயிர்நிற்க உதவியாகி
 நீள்நிலத்தில் எம்பெருமை நாட்டிநன்று
வில்லொத்த வள்ளுவனும் கம்பன்தானும்
 வெல்லுதற்கு வேறொருவர் இன்றிநின்றார்
இல்லொன்றும் தவறாது ஏகிநீயும்
 எம்கலையைப் 'பார்வதி'யே! காப்பாயம்மா.

4. மஞ்சளுடன் கரும்புநெல் மன்றில்வைத்து
 மாடுகளைக் குளிப்பாட்டி மலரும்சூட்டிக்
கொஞ்சலுடன் புத்துடைகள் குழந்தைக்கீந்து
 குழைவுடனே பொங்கலெனக் குதூகலித்து
நெஞ்சுவகை வறியோரும் நினைவாய்க்கொள்ள
 நேயமுடன் வேண்டுவன நோக்கித்தந்து
விஞ்சிடுவோம் சுவர்க்கமெனும் வாழ்வுதன்னை
 வேண்டுவன நமக்கமைதல் காண்போமங்கே.

5. வீரத்தில் சிறந்தநற் காளையானோர்
 விரட்டியே மாடுகளை வீழ்ந்துபற்றச்
சீறிவிழும் அவைதமது செருக்கையெல்லாம்
 சோர்ந்தடங்கப் பிடித்தடக்கும் தமிழ்வீரம்
மாறின்றி வழிவழியாய் மதித்துப்போற்றி
 மகிழ்வூட்டும் பொங்கலின்று வந்தநாளில்
கார்போன்று களிப்பூட்டப் 'பார்வதி' யும்
 கருதிநமை வந்திட்டாள் வாழி வாழி.

இவ்விரு பக்கங்களிலும் காணப் பெறும் பத்துப் படங்களுள்ளும் ஒரு கதை அடங்கியுள்ளது. படங்களிலுள்ள பாத்திரங்களுக்கும் அவர்களின் நடிப்பிற்கும் மிகப் பொருத்தமாக அமையுமாறு ஒரு கதை எழுதி அனுப்ப வேண்டும். வரும் கதைகளுள் எல்லா வகைகளிலும் சிறந்த ஒன்றுக்கு ரூ. 15/- பரிசு அளிக்கப்படும். **கதையுடன் பிரவேசக் கட்டணமாக நாலணுவுக்குத் தபால் ஸ்டாம்புகள் அனுப்பவேண்டும். பிரவேசக் கட்டணமின்றி வரும் கதைகள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டா.** கதை 'பார்வதி'யில் ஒரு பக்கத்தினுள் அடங்குவதா யிருத்தல் வேண்டும். பரிசு பெற்ற கதை அடுத்த இதழில் பிரசுரமாகும்.

—ஆசிரியர்

பாலர் கதை :

‘புலிப்பித்தன்’

கந்தன் ஓர் ஏழை; குதிரை வண்டி ஓட்டித்தான் அவன் பிழைத்து வந்தான். அவனுக்கு வரும்படி மிகவும் குறைவாகவே கிடைக்கும். கந்தனுக்கு வேலன் என்றொரு நண்பன் இருந்தான். அவனும் கந்தனைப் போலவே குதிரை வண்டி ஓட்டித்தான் பிழைத்துக் கொண்டிருந்தான். ஆனால் கந்தனைவிட வேலனுக்கு வருவாய் அதிகமாகவே கிடைக்கும். அவன் ஒரு நாளைக்குக் குறைந்த பட்சம் ஐந்து ரூபாய்கள் சம்பாதிப்பான். கந்தனோ ஒரு நாளைக் கெல்லாம் வண்டி ஓட்டி ஒன்றரை ரூபாய்கள் தான் சம்பாதிப்பான். அதுவும் சில நாட்களுக்குத்தான்.

இப்படியே அவர்கள் வாழ்க்கை நடந்து கொண் டிருந்தது. சில நாட்களுக் கெல்லாம் கந்தனுக்கு வருவாய் குறைந்துகொண்டே வரலாயிற்று; வேலனுக்கோ வருவாய் பெருகிக் கொண்டே இருந்தது. இந்த விஷயம் கந்தனிடம் பொறாமையைத் தூண்டிவிட்டது. அந்தப் பொறாமைத் தீ நாளாவட்டத்தில் கொழுந்து விட்டெரியத் தொடங்கியது. இடையில் அவன் மனம் சூழ்ச்சியில் இறங்கிற்று. வேலனின் வருவாயில் எப்படியாவது மண்ணைப் போட்டு விடுவது என்று தீர்மானித்தான்.

தன் தீர்மானத்தை நிறைவேற்றிக் கொள்ளப் பல கெட்ட எண்ணங்களை எண்ணினான்; எண்ணி எண்ணி ஒரு முடிவிற்கு வந்தான். உடனே கடைத் தெருவுக்குச் சென்றான். ஒரு கடையில் கொஞ்சம் பாஷாணத்தை வாங்கி, துணிக்குள் மூடி எடுத்துக்கொண்டு வீட்டுக்குத் திரும்பினான்.

தெருவின் மத்தியில் ஒரு புறமாகக்குதிரை வண்டிகள்

வரிசையாக நிறுத்தி வைக்கப்பட்டிருப்பது வழக்கம். அந்த இடத்திற்குச் சென்று பார்த்தபோது யதேச்சையாக அவனுடைய குதிரை வண்டியும் வேலனுடைய குதிரை வண்டியும் ஆக இரண்டு மட்டுமே நின்று கொண்டிருந்தன. அவன் மனம் குதூகல மடைந்தது. ‘இதுதான் நல்ல சமயம்’ என்று நினைத்தான். யாராவது பார்த்துக் கொண்டிருக்கிறார்களா என்று சுற்று முற்றும் பார்த்தான். ஒருவரும் இல்லை யென்பதறிந்து, மிகவும் அவசரமாக மேல் துணிக்குள் மறைத்து வைத்திருந்த



பாஷாணத்தை எடுத்து, வண்டிகளின் எதிரே கிடந்த காய்ந்த புல்லின்மீது தெளித்துவிட்டான். அந்தப் புல்லை அப்படியே வாரிக்கொண்டு போய் வேலனின் குதிரை முன்பாகப் போட்டு விட்டுச் சென்றான். வேலனின் குதிரை விஷம் கலந்த அந்தப் புல்லைத் தின்றுவிட்டு இறந்துவிடும் என்று எண்ணிச் சந்தோஷப்பட்டான் அவன்.

சற்றுநேரம் சென்றதும் வண்டியண்டை வேலன் வந்தான். தன் குதிரைக்கு முன்பாகக் காய்ந்து போனபுல் கிடப்பதையும், தன் குதிரை அதைத் தின்னாமல் நிற்பதையும் கண்டான். அவன் மனத்தில் ‘சுருக்’ கென்று விஷயம் விளங்கிவிட்டது. கந்தன் தான் காய்ந்த புல்லைக் கொண்டு வந்து போட்டிருக்கிறான் என்பதை யூகித் தறிந்து கொண்டான். ஆனால் அவனுக்கு மற்றொரு உண்மை தெரிய வரவேயில்லை. பொறாமையினால் கந்தன் தன் குதிரையை விஷமிட்டுக் கொல்ல முயற்சி செய்தான் என்பது அவனுக்குத் தெரியவே தெரியாது.

மடமடவென்று நடந்து சென்று கையில் கொஞ்சம் புதிய பசும் புல்லுடன் திரும்பி வந்தான் வேலன். காய்ந்த புல்லை எடுத்துக் கந்தனின் குதிரைக்கு முன்பாகப் போட்டுவிட்டு, தான் கொண்டு வந்திருந்த பசும்புல்லைத் தன் குதிரைக்குப் போட்டு விட்டுச் சென்றான். வேலனின் குதிரை அந்தப் பசும் புல்லை ருசித்துத் தின்றது. அதே சமயம் வேலன் எடுத்துப் போட்ட காய்ந்த புல்லையும் கந்தனின் குதிரை பறக்கப் பறக்கத் தின்றது; பாவம் கந்தன் பட்டினி போட்டு

வதைத்திருந்தான் அதை; அதனால் தான் காய்ந்த புல் என்றும் பாராமல் கிடைத்த வரையில் சரி என்று அவசர அவசரமாகத் தின்றது.

உச்சிவேளை வந்தது. கந்தன் களிப்புடன் சாப்பிட்டுவிட்டு வெற்றிலை போட்டுக்கொள்ளத் திண்ணையில் வந்து உட்கார்ந்தான். 'வேலனின் குதிரை இத்தனைநேரம் செத்து ஒழிந்திருக்கும்' என்று எண்ணியது அவனுடைய விஷ நெஞ்சம். இதை எண்ணியபோது அவன் மனம் அடைந்த குதூகலத்திற்கு அளவே இல்லை. பொறாமைத் தீ அவனை உள்ளத்தில் இவ்வளவு தூரம் கொடுமையாக வேலை செய்திருக்கிறது!

திடீரென்று லாயத்திலிருந்து குதிரை விகாரமாய் அலறிக் கனைக்கும் சப்தம் கேட்டது; எழுந்து ஓடினான் கந்தன். கண்டான் தன் குதிரையை! கண்ணீர் விட்டான்!

குதிரை வாயில் நுரை தள்ளிக் கீழே விழுந்து கிடந்தது. பாஷாணம் கலந்த காய்ந்த புல்லைத் தின்றதனால் குதிரை இறந்து விட்டிருந்தது. கந்தனின் நிலையில் ஒரு பெரிய மாறுதல் காணப்பட்டது. அவன் கைகால்கள் உதறின. அவன் மனச்சாட்சி அவன் முன் பெரிய -- விகாரமான - உருவெடுத்து நின்றது. அடுத்த நிமிஷம் அந்தப் பிரம்மாண்டமான பிரமை உருவம் கந்தனைப் பார்த்துக் கூறியது:

"அடே! மூடத்தனம் புரிந்த கந்தா! பார்த்தாயா? பொறாமை எண்ணம் கொண்டு நீ செய்த சூழ்ச்சியின் பலனாய் உன் குதிரையே செத்து ஒழிந்தது. கெடுவான் கேடு நினைப்பான் என்பதை இதன் மூலமாவது அறிந்து கொள்ளடா! இனிமேலாவது பொறாமை எண்ணத்தை விட்டொழித்து நல்லவன் என்று பெயரெடு" என்று கூறியது.

கந்தன் அப்போதுதான் தான் செய்த பெருந் தவறு எத்தகைய நஷ்டத்திற்குக் காரணமாய் இருந்திருக்கிறது என்பதை உணர்ந்தான். நடந்து போன காரியத்திற்காக மிகவும் மனம் வருந்தினான். அந்தக் கணத்திலேயே அவன் மனம் நல்வழிக்குத் திரும்பியது.

அது முதல் கந்தன் தன் உள்ளத்தில் பொறாமை உணர்ச்சிக்குத் துளிக்கூட இடம் தராமல் நல்ல சிந்தையுடன் இருக்கத் தலைப்பட்டான். ✳

'பார்வதி'

சென்னை நகர ஸோல் ஏஜண்ட்:

V. பரமசிவ நாடார்,

நேரு நியூஸ் ஏஜன்ஸி,

1, லஸ் கார்னர் - மயிலாப்பூர் - சென்னை 4.

சிலோன் ஸோல் ஏஜண்ட்:

நவலட்சுமி புத்தகசாலை

136, செட்டியார் தெரு — கொழும்பு.

தையும் பிறந்தது

‘மகரம்’

பொங்கலுக்கு வருவேன் என்று
போன என்றன் காந்தன் இன்னும்
மங்கை என்பால் வந்திடாத
மாயம் என்ன வோடி? தோழி!

சிந்தை முற்றும் கொள்ளை கொண்ட
செல்வன் என்மணாளன் இங்கே
வந்தென் சோகம் நீங்க இன்ப
வார்த்தை சொல்வதென்றோ? தோழி!

கண்ணை மூடும் போதும் உள்ளக்
கண்ணில் தோன்றிக் காதல் மூட்டும்
அண்ணல் ஆசைநாதன் வைத்த
ஆணையும்பொய் ஆமோ? தோழி!

ஆடவர்கள் பொய்யர் என்றே
யாரும் பேசி ஏசும் போது
‘தேடரும்என் தெய்வம்போலே
ஜகத்தில் இல்லை’ என்பேன் தோழி!

பொங்கலன்று கரும்பு தின்றோர்
பூமியில்மங் கையர் அஞ்சும்
அங்கம் அற்றோன் செங்கை வில்லை
அழித்திடாத தேனோ? தோழி!

வீசும் இத்தை மாத வாடை
மெய்சிலிர்த்தல் இன்றி, எற்கு
நாசம் செய்யும் காட்டுத் தீயை
நன்குணர்த்தல் ஏனோ? தோழி!

என்மனத்தியல்ப றிந்தும்
என்னை ஏமாற் றிட்ட அந்த
வன்மனத்தர் வந்து பார்க்கும்
வரையில் ஆவி ஆமோ? தோழி!

ஆவி ஓர்கால் தாவிப் போனால்,
ஐயனும்பின் வந்து கேட்டால்
‘தேவி உம்மைக் காணா தேங்கிச்
சென்றா’ ளென்று செப்பாய் தோழி!

கூட்டை விட்டுச் சென்று விட்டால்
கோமான் என்றன் நாதன் எந்த
நாட்டிருந்தாலும் நான் கண்டு
நன்மை பெறலா மன்றோ தோழி!

ஆழியில்துரும்பு போலே
அல்லல் உற்ற பேதை எற்குத்
தோழி உன்னைப் போலொருத்தி
துணையுமின்றேல் என்னாம்? தோழி!

****

அடுத்த இதழில்

தமிழ் நாட்டின் தலை சிறந்த எழுத்தாளர்களின் கதைகள், கட்டுரைகள், கவிதைகள் முதலியன வெளியாகின்றன.

இரண்டாம் இதழ்

பிப்ரவரி முதல் தேதி வெளியாகிறது

கதைகள்:

*	‘மாயாவி’	விதி
*	லா. ச. ராமாமிருதம்	புற்று
*	ஸ்வாமிநாத ஆத்ரேயன்	அந்தச் சிரிப்பு
*	வை. சுப்ரமண்யன்	செவ்வானம்
*	‘சுகி’	கோழை
*	எஸ். டி. ஸ்ரீநிவாஸன்	தண்டனை
*	சி. வ. ரா.	வாழ்க்கைச் சங்கிலி
*	ஸ்ரீமதி குமாரி	தியாகச் சின்னம்

கட்டுரைகள் :

*	‘கனவ்’	பூ
*	‘சிட்டி’	
*	மு. வரதராசன்	இன்பவாழ்வு

கவிதைகள் :

*	பாரதியார்
*	கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை
*	ம. ப. பெரியசாமித் தூரன்
*	‘குஹன்’

சினிமா விமரிசனம் :

கிருஷ்ண விஜயம்
வாழ்க்கை

‘பார்வதி’ இதழ் ஒவ்வொன்றும் பாதுகாக்கப்படவேண்டிய பொக்கிஷமாகும்.

தந்தி : 'ISWAR' போன் : 3711

ஆயில் எஞ்ஜின்கள், எலக்ட்ரிக் மோட்டார்கள், எலக்ட்ரிக் டிரில்லிங் மெஷின்கள், எலக்ட்ரிக் சாமான்கள், விவசாய பம்பு செட்டுகள், கேன் க்ரஷ்ஷர்கள், ரைஸ்மில் சாமான்கள், மற்றும் க்ரீம் ஸெபரேட்டர்கள் முதலியவற்றுக்கும் ஸ்டாக்கிஸ்டுகள்.

மதுரை ஜில்லாவுக்கு 'பெட்டர் ஆயில் எஞ்ஜின்'களுக்கு விநியோக உரிமையாளர்கள்.

★

தி மாடர்ன் எலக்ட்ரிக் கம்பெனி

எலக்ட்ரிகல் இஞ்ஜினீர்கள், கண்ட்ராக்டர்கள், மெஷினரி வியாபாரிகள்

301, லிங்கிசெட்டித் தெரு, சென்னை-1.

கிளை ஆபீஸ் :

134, திண்டுக்கல் ரோடு, மதுரை.

"பார்வதி பகுத்தறிவு"ப் போட்டி—1

ரொக்கப் பரிசு!



முடிவு தேதி 19—2—1950

மூன்று கூபன்களுக்குக் கட்டணம் ரூ. 1.

தனிக் கூபனுக்கு அணா 8

இதன்படி ஒரே கூபன் அனுப்புகிறவர்கள் எட்டணா அனுப்ப வேண்டும். இரண்டு கூபன்களுக்கும் மூன்று கூபன்களுக்கும் ரூ. 1—0—0; நான்கு கூபன்களுக்கு ரூ. 1—8—0; ஐந்து கூபன்களுக்கும் ஆறு கூபன்களுக்கும் ரூ. 2—0—0; ஏழு கூபன்களுக்கு ரூ. 2—8—0. இவ்விதமாகக் கணக்கிட்டு அனுப்புதல் வேண்டும்.

விடை கண்டு பிடிக்கும் விதம்:

முதற் குறிப்பு: இடமிருந்து வலம்—*1.* ஐந்து எழுத்துக்கள் கொண்ட வார்த்தையாகிய 'கசமுகன்' என்னும் பதம் குறிப்பிற் கேற்ப அமைந்துள்ளது. அதேபோல் மேலிருந்து கீழ்—*1.* 'கசானு' என்ற வார்த்தை சரியான விடையாக அமைகிறது. இதேபோல் மற்ற வார்த்தைகளையும் கண்டுபிடித்து எழுதி அனுப்ப வேண்டும்.

போட்டி நிபந்தனைகள்

1. ஆசிரியரின் 'ஸீல்' இட்ட சரியான விடை சென்னை இண்டோ கமர்ஷியல் பாங்கியில் டெபாஸிட் செய்யப்பட் டிருக்கிறது.

2. ஆசிரியரின் எழுத்துக் கெழுத்து சரியான விடை அனுப்புகிறவர்களுக்கு முதற் பரிசும், ஒரு தவறுள்ள விடை அனுப்புகிறவர்களுக்கு இரண்டாவது பரிசும் அளிக்கப்படும்.

3. ஒருவரே ஒன்றுக்கு மேற்பட்ட பரிசுகளும் பெறலாம். யாருமே சரியான விடை அனுப்பாவிட்டால், ஒரு தவறுள்ள விடைக்கு முதற் பரிசும் இரண்டு தவறுகளுள்ள விடைக்கு இரண்டாவது பரிசும் அளிக்கப்படும்.

4. ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடைகள் வந்தால் பரிசுத் தொகை பகிர்ந்தளிக்கப்படும்.

(67-ம் பக்கம் பார்க்க)

"பார்வதி பகுத்தறிவு"ப் போட்டி—1



பெயர்

விலாசம்

ஜில்லா

ம.ஆ.ரசீது நெ. தேதி கூபன் நெ.

இங்கே கத்தரிக்கவும்

"பார்வதி பகுத்தறிவு"ப் போட்டி—1



பெயர்

விலாசம்

ஜில்லா

ம.ஆ.ரசீது நெ. தேதி கூபன் நெ.

(65-ம் பக்கத் தொடர்ச்சி)

5. விடைகள் 'பார்வதி'யில் வெளியாகும் அச்சிட்ட கூபன்களில்தான் எழுதியனுப்பப் படல் வேண்டும். கூபன்கள் மையினால் தெளிவாகப் பூர்த்தி செய்யப்பட வேண்டும். தனிக் காகிதங்களில் எழுதப்படும் விடைகளும், அடித்தல் திருத்தல் உள்ள கூபன்களும் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்பட மாட்டா.

6. கூபன்களில் ஒன்று அல்லது பல கட்டங்கள் பூர்த்திசெய்யாமல் விடப்பட்டிருந்தால், அந்தக் கூபன்களைப் போட்டிக்கு அங்கீகரிக்க இயலாது.

7. பிரவேசக் கட்டணம் தனிக் கூபனுக்கு அணா 8 வீதமும், மூன்று கூபன்களுக்கு ரூ. 1 வீதமும் அதற்கு மேற்பட்ட கூபன்களுக்கு மேற்சொன்னவாறும் கணக்கிட்டு அனுப்புதல் வேண்டும். பிரவேசக் கட்டணத் தொகை மணியார்டர் மூலமாகவோ அல்லது சென்னையில் கிளையுள்ள தொரு பாங்கியின் கிராஸ் செய்த டிராப்ட் மூலமாகவோ அனுப்பப்படல் வேண்டும்.

8. மணியார்டர் ரசீதின்றி வரும் கூபன்கள் போட்டியில் சேர்த்துக்கொள்ளப்படமாட்டா.

9. போட்டிக்காக அனுப்பப் பெறும் தொகைகள் வேறு கணக்குக்கு ஈடுசெய்து கொள்ளப்படமாட்டா. எந்தக் காரணத்தைக் கொண்டும் இந்தத் தொகை திருப்பி அளிக்கப்பட மாட்டாது.

10. போட்டி சம்பந்தமாக எந்த விதமான கடிதப் போக்குவரத்தும் வைத்துக் கொள்ளப்படமாட்டாது.

11. போட்டி விடைகள் 'பார்வதி' காரியாலயத்தில் **19-2-50** ஞாயிறு மாலை ஆறுமணிக்குள் கிடைக்கும்படியாக, போட்டி ஆசிரியர், "பார்வதி பகுத்தறிவு"ப் போட்டி--1, 2/11, மவுண்ட்ரோடு, சென்னை—2 என்ற விலாசத்துக்கு முன் கூட்டியே அனுப்பப் படல் வேண்டும். முடிவு தேதிக்குப் பிறகு வந்து சேரும் கூபன்கள் நிராகரிக்கப்படும்.

12. ஒருவர் பிரவேசக் கட்டணத்தை மணியார்டர் மூலமாக அனுப்பி யிருக்கலாம்; அதை நாம் பெற்றுக்கொண் டிருக்கலாம்; ஆயினும் அவர் அனுப்பிய கூபன்கள் எமக்கு வந்து சேராமல் இருந்தால் அதற்கு நாங்கள் பொறுப்பாளிகளல்ல.

13. தபால் மூலமாகவோ அல்லது வேறு விதமாகவோ கூபன்கள் தவறி யிருந்தால் அதற்கு நாங்கள் பொறுப்பாளிகளல்ல.

14. போட்டி சம்பந்தமாக ஆசிரியர் தீர்ப்பே முடிவானதென்றும் சட்டப்படிக் கட்டுப்படுத்துவதென்றும் ஒப்புக் கொண்டே இந்தப் போட்டியில் ஈடுபடுதல் வேண்டும்.

15. இப் போட்டியில் உபயோகிக்கப் பட்டுள்ள வார்த்தைகள் 'ஆனந்த விகடன்' அகராதியில் உள்ளன.

16. 'பார்வதி' காரியாலயத்தாரும் அதனோடு சம்பந்தப்பட்டுள்ள மற்றக் காரியாலயங்களிலுள்ளவர்களும் இந்தப் போட்டியில் கலந்துகொள்ள அநுமதிக்கப்பட மாட்டார்கள்.

17. போட்டிக் குரிய பிரவேசக் கட்டணமும், கூபன்களும் கீழ்க் கண்ட விலாசத்துக்கு அனுப்பப்பெற வேண்டும்.

To

"பார்வதி பகுத்தறிவு"ப் போட்டி-1
2/11, மவுண்ட் ரோடு,
சென்னை—2.

(தவறுதலான விலாசத்தைத் தவிர்க்க இதையே கத்தரித்துக் கவரின்மேல் ஒட்டுவது நலம்.)

இந்தப் போட்டியின் சரியான விடை மார்ச்சு மீ 1உ வெளியாகும் 'பார்வதி' இதழில் பரிசு பெற்றவர்களின் பூரண ஜாபிதாவுடன் வெளியிடப்படும்.

சிலோனிலுள்ள போட்டி நேயர்கள் பிரவேசக் கட்டணத்துக் குரிய தொகைக்கு சிலோன் போஸ்டல் ஆர்டர்கள் வாங்கி, அவைகளில் ஒன்றும் எழுதாமல் கூபன்களுடன் எமக்கு அனுப்பி வைக்கலாம்; அல்லது 136, செட்டியார் தெரு, கொழும்பு என்ற விலாசத்திலுள்ள எமது சிலோன் பிரதிநிதிகளான நவலட்சுமி புத்தக சாலையாரிடம் கொடுத்து ரசீது பெறலாம்.

சென்னையிலுள்ள போட்டி நேயர்களின் சௌகரியத்தை உத்தேசித்து, போட்டியின் முடிவு தேதியை விடுமுறை நாளாகிய 19—2—50 ஞாயிறன்று வைத்துள்ளோம். அன்று நமது காரியாலயம் காலை ஒன்பது மணி முதல் மாலை ஆறுமணி வரை திறந்திருக்கும். கூபன்களையும் பிரவேசக் கட்டணத்தையும் காரியாலயத்தில் செலுத்தி ரசீது பெறலாம்.

———: * :———

“பார்வதி பகுத்தறிவு”ப் போட்டி—1



பெயர்

விலாசம்

ஜில்லா

ம.ஆ.ரசீது நெ. தேதி கூபன் நெ.

இங்கே கத்தரிக்கவும்

“பார்வதி பகுத்தறிவு”ப் போட்டி—1



பெயர்

விலாசம்

ஜில்லா

ம.ஆ.ரசீது நெ. தேதி கூபன் நெ.

"பார்வதி பகுத்தறிவு"ப் போட்டி—1—குறிப்புகள்

இடமிருந்து வலம்

1. ஒரு காரியத்தைச் செய்ய முற்படுமுன் இவனை வணங்குவது வழக்கம்.

3. தமக்கு ஏதாவது இது இல்லாமல் ஒரு காரியத்தில் ஈடுபட்டு முனைந்து வேலைசெய்ய முன்வர மாட்டார்கள் சிலர்.

5. ....க்கு வரவர முக்கியத்துவம் குறைந்து வருகிறது.

6 ஸ்ரீராமன் மகனிவன்.

7. ....இல்லாமல் பெரிய விஷயங்களில் ஈடுபடுதல் உசிதமல்ல.

9. இந்த மாட்டை வண்டியில் பூட்டி ஓட்டினால், வழியில் சண்டி செய்து படுத்துக்கொள்ளுமே!

12. முகவுரை என்று பொருள்படும்.

13. கட்டுரை.

15. ஒரு பொறுப்பான உத்தியோகத்திலுள்ளவர்கள் இது பெறாமல் தமது சொந்த வேலையாய் வெளியூருக்குச் செல்லலாகாது.

16. இதன் வளர்ச்சிக்கு 'பார்வதி' தொண்டு செய்ய முற்பட்டுள்ளது.

17. ....வை அவமதித்துப் பேசும் பிள்ளைகளும் இருக்கிறார்கள்.

19. ஆசான்.

20. ....பணம் படைத்தவர்கள்தான் சினிமாப் படம் எடுக்கத் துணிகிறார்கள்.

21. பெரிய தொழிற்சாலைகளின் நிர்வாகிகள், வாசலில் திறமையான காவலாட்களைப் போட்டு இதுகூடத் திருட்டுப் போகாதபடி பார்த்துக் கொள்ள வேண்டும் என்பதாக உத்தரவு போட்டு விடுகிறார்கள்.

23. ....தெரிந்து பேசி காரியத்தைச் சாதித்துக்கொள்வது சிலருக்குத்தான் தெரியும்.

24. இது வந்து விட்டால் அவஸ்தைதான்!

மேலிருந்துகீழ்

1. ஒவ்வொரு தாலூகா ஆபிசிலும் ஒரு இது இருக்கும்.

2. மனதிலே இது இருந்தால் முகம் சற்று வாட்டமாகத்தானிருக்கும்.

4. சந்நியாசி.

7. நிறைய இது இருந்தாலும் செலவு செய்யவே மனம் வருவதில்லை சிலருக்கு.

8. இதிலே விளையும் காய்கறிகள் நல்ல ருசியுடனிருக்கும்.

10. ....வீடுகளில் ஏழைகள் வசிப்பதற்கில்லை.

11. இதிலிருந்துகொண்டு கீழே எட்டிப் பார்த்தால் பயமாகவே இருக்கும்.

13. ஒரு சாமான் மனதுக்குப் பிடித்ததாயிருந்தால், என்ன இதுவாயிருந்தாலும் கொடுத்து வாங்கிவிடத் தோன்றுவது இயற்கைதான்.

14. பார்வதி.

16. இது இல்லாமல் பொங்கல் பண்டிகை நடக்குமா?

18. இது மிகவும் அதிகமானால் தாங்க முடியாது.

19. ....என்று தெரிந்தும் ஒரு பெண்ணை மணக்க யாராவது முன் வருவார்களா?

21. சிலர் எங்குக் கிளம்புவதானாலும் இது இல்லாமல் செல்வதில்லை.

22. சாப்பாட்டிலே இதை நிறையச் சேர்த்துக் கொள்கிறார்கள் சிலர்.

* * *

அச்சுக் கலை

✲ ஓர் அருங்கலையாக இந்தச் சகாப்தத்தில் மதிக்கப் பெறுவது அச்சுக் கலை. மனித வாழ்க்கையின் ஒவ்வொரு படியிலும் உறு துணையாய் நின்று உதவுவதும் அச்சுக் கலைதான்!

✲ பல வகைகளிலும் அச்சு வேலைகளின் சாதனைகள் வியக்கத் தக்க முறையில் அமைந் துள்ளன. உயர்தரமான அச்சு வேலைகள் சுத்தமான முறையில் அமைந்து விட்டால், அவற்றின் மதிப்பும் அலாதியாகத்தான் இருக்கும்!

✲ இத்தகைய அச்சு வேலைகளுக்கு நமது ஸ்தாபனம் முதன்மை ஸ்தானம் வகிக்கின்றது. குறித்த காலத்தில் வேலைகளை முடித்து வழங்குவது எங்கள் முதல் லட்சியம்.

ராயல் பிரிண்டிங் ஒர்க்ஸ்

11-A, மவுண்ட் ரோடு, சென்னை - 2.

'பார்வதி'

விளம்பர விகிதம்

உள்பக்கம்	ரூ. 100/-
இரண்டாவது அட்டை	ரூ. 250/-
மூன்ருவது அட்டை	ரூ. 200/-
நாலாவது அட்டை	ரூ. 350/-

6 மாதகாலத்துக் குரிய காண்ட்ராக்ட் விளம்பரங்களுக்கு 5% தள்ளுபடி

1 வருட காலத்துக்குரிய காண்ட்ராக்ட் விளம்பரங்களுக்கு 10% தள்ளுபடி

நீண்டகால ஒப்பந்தங்களுக்கு எழுதவும்

பத்திரிகையின் முழு அளவு 7''x10''
அச்சுப் பக்க அளவு 6''x8''

விவரங்களுக்கு :
விளம்பர மானேஜர், 'பார்வதி'

எழுத்தாளர்களுக்கு

இலக்கிய நயம் செறிந்த கதை கட்டுரைகளையும், கவிதைகளையும் 'பார்வதி'யில் பிரசுரிக்க வரவேற்கிருேம். மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் முறையிலும், இலக்கியப்பத்திரிகைகளிடையேபுதுப்பாதை வகுத்துச் செல்லும் 'பார்வதி'யின் தூய லட்சியத்திற்கு ஓரளவு ஈடு செய்யும் வகையிலும் கதைகளும் கட்டுரைகளும் அமைந்திருத்தல் வேண்டும். பயன் பெறத்தக்க கதை கட்டுரைகளை எழுத முயலும் இளம் எழுத்தாளர்களுக்கு 'பார்வதி' பாரபட்சமற்ற வரவேற்பளிப்பாள். அங்கிகரிக்கப் பெருத கையெழுத்துப் பிரதிகளைத் திரும்பப் பெற விரும்புவோர் போதிய தபால் தலைகள் அனுப்புதல் வேண்டும். அனுப்பும் பிரதிகளுக்கு ஒரு நகல் வைத்துக் கொள்வது நல்லது. பிரசுரமாகும் எல்லா விஷயங்களுக்கும் தக்க சம்மானம் வழங்கப்படும்.

விவரங்களுக்கு :
ஆசிரியர், 'பார்வதி'.

'பார்வதி'

தமிழ் இலக்கிய மாத இதழ்
பிரதி ஆங்கில மாத முதல் தேதி வெளிவரும்

ஏஜண்டுகள் மூலம் 'பார்வதி' இதழ்களைத் தொடர்ந்து பெற வசதி இல்லாத அன்பர்களுக்கும், தபாலில் பெற விரும்பும் அன்பர்களுக்கும் சந்தாத் திட்டம் மிகவும் செளகரிய மளிக்கும். குறித்த தேதியில் பத்திரிகை தங்களைத் தேடி வந்தடையும். பக்கத்திலுள்ள கூபனைக் கத்தரித்துப் பூர்த்தி செய்தனுப்பினல், தங்கள் பெயரைச் சந்தாதாராகப் பதிவு செய்துகொண்டு பிரதிகளைத் தபாலில் அனுப்புவோம்.

வருடச் சந்தா :

உள் நாடு	ரூ. 6—0—0
வெளிநாடு	ரூ. 7—8—0

தனிப்பிரதி
உள்நாடு அணு 8
வெளிநாடு அணு 10

'பார்வதி' சந்தா கூபன்

To
சந்தா மானேஜர்,
'பார்வதி' சென்னை—2.

அன்புடையீர்,

தங்கள் 'பார்வதி' பத்திரிகையின் சந்தாதாராக விரும்பி இத்துடன் ஒரு வருடத்துக்குரிய சந்தாத் தொகை ரூ.........யை மணியார்டர் / போஸ்டல் ஆர்டர்/செக் மூலம் அனுப்பியுள்ளேன். ....முதல் என்னைச் சந்தாதாராகப் பதிவுசெய்துகொண்டு 'பார்வதி' பிரதிகளைத் தொடர்ந்து தபால் மூலம் அனுப்பி வைக்கக் கோருகிறேன்.

....
(கையொப்பம்)

பெயர்..............................
விலாசம்............ ....
....
தேதி............

விவரங்களுக்கு : சந்தா மானேஜர், 'பார்வதி', சென்னை—2

பிளாக்குகள் செய்வதில்

உயர்ந்த வேலைப்பாட்டுடனும்
குறித்த தவணையிலும்
பிறரைவிட சரசமாயும்
செய்து உங்களுக்குப்பூரண
திருப்தியளிக்க முடியும்!

அவசியமான புதியமேனாட்டு
சாதனங்களுடன் தொழில்-
நிபுணர்களின் தேர்ச்சிபெற்ற
மேற்பார்வையில் செய்கிறோம்.

உங்கள் தேவைகளை
உடனே தெரிவியுங்கள்.

போன்: 8172

பாரத் ஸ்டுடியோ

ஆர்டிஸ்ட்ஸ், போட்டோகிராபர்ஸ், பிளாக்குகள் தயாரிப்போர்.

மவுண்ட் ரோடு.... மதராஸ், 2.